அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

புகுமுக வகுப்புச்

# செய்யுட் கோவை

1978-79

# 1. திருக்குறள்

திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. பதினெண் கீழ்க்கணக்கில் இந்நூல் முப்பால் என்று பெயர்பெறுகின்றது. இந்நூலுக்குப் பொய்யா மொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை. உத்தரவேதம் முதலிய பெயர்களும் உள்ளன. இந்நூலின் ஆசிரியர் திருவள்ளுவர்.

இந்நூல் குறள் வெண்பாவாலாகிய நூலாதலின் திருக்குறள் எனப்பட்டது. குறள் என்னும் பாவின் பெயர், அதனுலாகிய நூலுக்குப் பெயராக இருத்தலால் கருவியாகு பெயர். அது திருவென்னும் அடைமொழி அடுத்து வந்தது. அதனல் அடையடுத்த கருவியாகு பெயர்.

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என்ற மூன்று பால்களை உடையது. அவற்றுள் அறத் துப்பால் முப்பத்தெட்டு அதிகாரங்களையும் பொருட்பால் எழுபது அதிகாரங்களையும் காமத்துப்பால் இருபத்தைந்து அதிகாரங்களையும் கொண்டு நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களால் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட் பாக்களால் ஆக்கப்பட்டுள்ளது.

அறத்துப்பால் இல்லறவியல், துறவறவியல் என இரு பிரிவுகளையும் பொருட்பால் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூன்று பிரிவுகளையும் காமத்துப்பால் களவியல், கற்பியல் என இரு பிரிவுகளையும் உடையன.

இந்நூலின் பெருமை பேசத் திருவள்ளுவமாலே யென்ற ஒரு தனிநூலேயமைந்துள்ளது. திருவள்ளுவ மாலேயில் நத்தத்தனுர் பாடிய

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னேடு பகர்ந்ததற்பின் — போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

என்ற வெண்பா திருக்குறளின் சிறப்பினை நன்கு எடுத்துக் காட்டும். திருக்குறளின் காலம் கடைச்சங்கத் திறுதி யென்பர்.

நும் பாடப் பகுதிக்குரிய அதிகாரங்கள் ஐந்தும் பொருட்பாலில் ஒழிபியற் பிரிவில் உள்ளவை. ஒழிபி யலில் நன்றியில் செல்வம், நாணுடைமை, குடிசெயல் வகை, உழவு, நல்குரவு என்னும் அதிகாரங்களின் கீழ் அமைந்தன.

தேடியவர்க்கும், பிறர்க்கும் பயன்படாத செல்வத் தின் இயல்பை விளக்குவது நன்றியில் செல்வம். சான்ருண்மை, பண்பு, முதலிய குணங்களால் உயர்ந் தோர், தம்மியல்புக்குப் பொருந்தாத செயல்களுக்கு நாணம் அடைவது, நாணமுடைமையாகும். ஒருவன் தான் பிறந்த குடியை உயரச் செய்வதன் திறம் கூறுவது குடி செயல்வகை. உழுதொழிலின் பெருமை கூறுவது உழவு. துய்ப்பன யாயும் இல்லாமை கூறுவது நல்குரவு.

# திருக்குறள்

## 1. நன்றியில் செல்வம்

1. வைத்தான் வாய்சான்ற பெரும்பொருளஃ துண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்.

2. பொருளானு மெல்லாமென் றீயா திவறும்
மருளானு மாணாப் பிறப்பு.

3. ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை.

4. எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ வொருவரால்
நச்சப் படாஅ தவன்.

5. கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில்.

6. ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்கொன்
றீத லியல்பிலா தான்.

7. அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம்
பெற்றா டமியண்மூத் தற்று.

8. நச்சப் படாதவன் செல்வ நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று.

9. அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்.

10. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து.

## 2. நாணுடைமை

1. கருமத்தா னாணுத னாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற.

2. ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

3. ஊனைக் குறித்த வுயிரெல்லா நாணென்னும்
நன்மை குறித்தது சால்பு.

4. அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கஃ தின்றேற்
பிணியன்றோ பீடு நடை.

5. பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு.

6. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

7. நாணா லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டால்
நாண்டுறவார் நாணாள் பவர்.

8. பிறர்நாணத் தக்கது தானாணா னாயின்
அறநாணத் தக்க துடைத்து.

9. குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை.

10. நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணா லுயிர்மருட்டி யற்று.

## 3. குடிசெயல்வகை

1. கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில்.

2. ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டின்
நீள்வினையா னீளுங் குடி.

3. குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

4. சூழாமற் றானே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு.

5. குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு.

6. நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல்.

7. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை.

8. குடிசெய்வார்க் கில்லை பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும்.

9. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பா னுடம்பு.

10. இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்றும்
நல்லா ளிலாத குடி.

## 4. உழவு

1. சுழன்று மேர்ப்பின்ன துலக மதனுல்
உழந்து முழவே தலை.

2. உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்ரு
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

3. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.

4. பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்.

5. இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலையவர்.

6. உழவினர் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை.

7. தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

8. ஏரினு நன்ரு லெருவிடுதல் கட்டபின்
நீரினு நன்றதன் காப்பு.

9. செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்.

10. இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னு நல்லா ணகும்.

## 5. நல்குரவு

1. இன்மையி னின்னாத தியாதெனி னின்மையின்
இன்மையே யின்னா தது.

2. இன்மை யெனவொரு பாவி மறுமையும்
இம்மையு மின்றி வரும்.

3. தொல்வரவுந் தோலும் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னு நசை.

4. இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.

5. நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

6. நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

7. அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

8. இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு.

9. நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் காண்பா டரிது.

10. துப்புர வில்லார் துவரத் துறவாமை
உப்பிற்குங் காடிக்குங் கூற்று.

# 2. மணிமேகலை

மணிமேகலை ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் ஆவார். மாதவியின் மகளான மணிமேகலையின் வரலாற்றை விழாவறை காதை முதலாகப் பவத்திற மறுகெனப் பாவை நோற்ற காதை இறுதியாக முப்பது காதைகளில் கூறிச் செல்கிறது. இக் காப்பியம் ஆசிரியப் பாவால் அமைந்தது.

இந்நூலில் பல்வேறு அறக் கருத்துக்கள் பேசப் படினும் பசிப்பிணி நீக்கமே தலைமை அறமாகக் கூறப் பட்டுள்ளது. பௌத்த சமயக் கருத்துக்கள் இந்நூல் முழுதும் விரவி, இது ஒரு சமயக் காப்பியமாகவே அமைந் துள்ளது. தமிழில் இதுவே முதல் சமயக் காப்பியம் எனக் கூறலாம்.

சிலம்பின் தொடர்ச்சியே இந்நூலெனக் கருதிச் சிலம்பையும் மணிமேகலையையும் இணைத்து இரட்டைக் காப்பியம் என இலக்கிய உலகு அழைக்கிறது. மணி மேகலையைத் தவிரக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் பாடியனவாக நற்றிணையில் மூன்று பாடல்களும், குறுந் தொகையில் ஒரு பாடலும் அகநானூற்றில் ஐந்து பாடல் களும், புறநானூற்றில் ஒரு பாடலும், திருவள்ளுவ மாலையில் ஒன்றுமாகப் பதினொரு பாடல்கள் கிடைத்துள, இவரது காலம் கி.பி மூன்றும் நூற்றாண்டெனக் கணிக்கப் பெறுகின்றது.

பாடப்பகுதியாக அமைந்த ''ஆதிரை பிச்சையிட்ட காதை'' யில் விஞ்சை மகள், மணிமேகலையை நோக்கி ஆதிரையது கற்பின் சிறப்பை விரித்துக் கூறுகின்ருள். மணிமேகலை அமுதசுரபியைக் கையிலேந்தி ஓவியப் பாவை போல ஆதிரை மனைவயின்நிற்க, அவள், அமுத சுரபி நிறைந்து விளங்க 'பாரக மடங்கலும் பசிப்பிணி யறுக' எனக் கூறி ஆருயிர் மருந்தாகிய அன்னத்தை இட்டனள். இப்பகுதியில் சாதுவன் நாகர் தலைமகனுக்குக் கூறும் அறவுரைகள் படித்துணரத் தக்கன.

# மணிமேகலை

## ஆதிரை பிச்சையிட்ட காதை

## ஆதிரையின் வரலாறு

### சாதுவன் பரத்தமை

ஈங்கிவள் செய்தி கேளென விஞ்சையர்
பூங்கொடி மாதர்க்குப் புகுந்ததை யுரைப்போள்
ஆதிரை கணவ னுயிழை கேளாய்
சாதுவ னென்போன் றகவில னாகி
ஆயிழை தன்னை யகன்றனன் போகிக்
கணிகை யொருத்தி கைத்தூ ணல்க
வட்டினும் சூதினும் வான்பொருள் வழங்கிக்
கெட்ட பொருளின் கிளைகே டுறுதலிற்
பேணிய கணிகையும் பிறர்நலங் காட்டி
காண மிலியெனக் கையுதிர்க் கோடலும்

## கடலிற் பிழைத்தல்

வங்கம் போகும் வாணிகர் தம்முடன்
தங்கா வேட்கையிற் றானுஞ் செல்வுழி
நளியிரு முந்நீர் வளிகலன் வௌவ
ஒடிமரம் பற்றி யூர்திரை யுதைப்ப
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கஞ் சார்ந்தவர் பான்மைய னாயினன்

## ஆதிரை தீப்புகுதல்

நாவாய் கேடுற நன்மரம் பற்றிப்
போயினன் றன்னோ டுயிரயப் போந்தோ
ரிடையிரு ளியாமத் தெறிதிரைப் பெருங்கட
லுடைகலப் பட்டாங் கொழிந்தோர் தம்முடன்
சாதுவன் றானும் சாவுற் றானென
ஆதிரை நல்லா ளாங்கது தான்கேட்
டூரீ ரேயோ வொள்ளழ லீமந்
தாரீ ரோவெனச் சாற்றினள் கழறிச்
சுடலைக் கானிற் றொடுகுழிப் படுத்து
முடலை விறகின் முளியெரி பொத்தி
மிக்கவென் கணவன் வினைப்பய னுய்ப்பப்
புக்குழிப் புகுவே னென்றவள் புகுதலும்

## தீ சுடாமை

படுத்துடன் வைத்த பாயற் பள்ளியு
முடுத்த கூறையு மொள்ளெரி யுருஅது
ஆடிய சாந்தமு மசைந்த கூந்தலிற்

சூடிய மாலையுந் தொன்னிறம் வழாது
விரைமலர்த் தாமரை யொருதனி யிருந்த
திருவின் செய்யோள் போன்றினி திருப்பத்
தீயுங் கொல்லாத் தீவினை யாட்டியேன்
யாது செய்கே னென்றவ ளேங்கலும்

## வானொலிச் செய்தி

ஆதிரை கேளுன் னரும்பெறற் கணவனை
யூர்திரை கொண்டாங் குய்ப்பப் போகி
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கஞ் சேர்ந்தனன் பல்லியாண் டிராஅன்
சந்திர தத்த னெனுமோர் வாணிகன்
வங்கந் தன்னொடும் வந்தனன் தோன்றும்
நின்பெருந் துன்ப மொழியாய் நீயென
அந்தரந் தோன்றி யசரீரி யறைதலும்

## ஆதிரையின் பத்தினிமை

ஐயரி யுண்க ணழுதுயர் நீங்கிப்
பொய்கைபுக் காடிப் போதுவாள் போன்று
மனங்கவல் வின்றி மனையகம் புகுந்தென்
கண்மணி யனையான் கடிதீங் குறுகெனப்
புண்ணிய முட்டாள் பொழிமழை தருஉம்
அரும்பெறன் மரபிற் பத்தினிப் பெண்டிரும்
விரும்பினர் தொழூஉம் வியப்பின ளாயினள்

### சாதுவன் மொழிப்பயன்

ஆங்கவள் கணவனு மலைநீ ரடைகரை
யோங்குயர் பிறங்க லொருமர நீழன்
மஞ்சுடை மாழ்கட லுழந்தநோய் கூர்ந்து
துஞ்சுதுயில் கொள்ளச் சூர்மலை வாழும்
நக்க சாரணர் நயமிலர் தோன்றிப்
பக்கஞ் சேர்ந்து பரிபுலம் பினனிவன்
தானே தமியன் வந்தன னளியன்
ஊனுடை யிவ்வுடம் புணவென் றெழுப்பலும்
மற்றவர் பாடை மயக்கறு மரபிற்
கற்றன னாதலிற் கடுந்தொழின் மாக்கள்
சுற்று நீங்கித் தொழுதுரை யாடி
யாங்கவ ருரைப்போ ரருந்திறல் கேளாய்
ஈங்கெங் குருமக னிருந்தோ னவன்பாற்
போந்தரு ணீயென வவருடன் போகிக்

### குருமகன் தோற்றம்

கள்ளடு குழிசியுங் கழிமுடை நாற்றமும்
வெள்ளென் புணங்கலும் விரவிய விருக்கையி
லெண்குதன் பிணவோ டிருந்தது போலப்
பெண்டுட னிருந்த பெற்றி நோக்கிப்
பாடையிற் பிணித்தவன் பான்மைய னாகிக்
கோடுயர் மரநிழற் குளிர்ந்த பின்னவன்
ஈங்குநீ வந்த காரண மென்னன
வாங்கவள் கலைகட லுற்றதை யுரைத்தலும்
அருந்துத லின்றி யலைகட லுழந்தோன்

### குருமகன் விருந்தோம்பல்

வருந்தின னளியன் வம்மின் மாக்கள்
நம்பிக் கிளையளோர் நங்கையைக் கொடுத்து
வெங்களு மூனும் வேண்டுவ கொடுமென
வவ்வுரை கேட்ட சாதுவ னயர்ந்து
வெவ்வுரை கேட்டேன் வேண்டே னென்றலும்

### குருமகன் வியப்பு

பெண்டிரு முண்டியு மின்றெனின் மாக்கட்
குண்டோ ஞாலத் துறுபய னுண்டெனில்
காண்குவ மியாங்களும் காட்டுவா யாகெனத்
தூண்டிய சினத்தினன் சொல்லெனச் சொல்லும்

### சாதுவன் மெய்ந்நெறி கூறல்

மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
பிறந்தவர் சாதலு மிறந்தவர் பிறத்தலு
முறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்
நல்லறஞ் செய்வோர் நல்லுல கடைதலு
மல்லறஞ் செய்வோ ரருநர கடைதலு
முண்டென வுணர்தலி னுரவோர் களைந்தனர்
கண்டனை யாகெனக் கடுநகை யெய்தி

### குருமகன் புத்துணர்வு

உடம்பு விட்டோடு முயிருருக் கொண்டோ
ரிடம்புகு மென்றே யெமக்கீங் குரைத்தா
யவ்வுயி ரெவ்வணம் போய்ப்புகு மவ்வகை
செவ்வன முரையெனச் சினவா திதுகேள்

### உயிருண்மை

உற்றதை யுணரு முடலுயிர் வாழ்வுழி
மற்றைய வுடம்பே மன்னுயிர் நீங்கிடிற்
றடிந்தெரி யூட்டினுந் தானுண ராதெனி
னுடம்பிடைப் போனதொன் றுண்டென வுணர்நீ

### வினைப்பிறவி

போனோர் தமக்கோர் புக்கிலுண் டென்பது
யானோ வல்லே னியாவரு முணர்குவ
ருடம்பீண் டொழிய வுயிர்பல காவதங்
கடந்துசேட் சேறற் கனவினுங் காண்குவை
யாங்கனம் போகிய வவ்வுயிர் செய்வினை
பூண்ட யாக்கையிற் புகுவது தெளிநீ

### குருமகன் பணிவுரை

என்றவ னுரைத்தலு மெரிவிழி நாகனும்
நன்றறி செட்டி நல்லடி வீழ்ந்து
கள்ளு மூனுங் கைவிடி னிவ்வுடம்
புள்ளுறை வாழுயி ரோம்புத லாற்றேன்
றமக்கொழி மரபிற் சாவுறு காறு
மெமக்கா னல்லற யெடுத்துரை யென்றலு

### சாதுவன் அறவுரை

நன்று சொன்னாய் நன்னெறிப் படர்குவை
உன்றனக் கொல்லும் நெறியற முரைக்கே
னுடைகல மாக்க ளுயிருய்ந் தீங்குறி
னடுதொழி லொழிந்தவ ராருயி ரோம்பி

மூத்துவிளி மாவொழித் தெவ்வுயிர் மாட்டுந்
தீத்திற மொழிகெனச் சிறுமக னுரைப்போன்

### சாதுவன் வீடு திரும்பல்

ஈங்கெமக் காகு மிவ்வறஞ் செய்கே
மாங்குனக் காகு மரும்பொருள் கொள்கெனப்
பண்டும் பண்டும் கலங்கவிழ் மாக்களை
யுண்டே மவர்தம் முறுபொரு ளீங்கிவை
விரைமர மென்றுகில் விழுநிதிக் குப்பையோ
டிவையிவை கொள்கென வெடுத்தனன் கொணர்ந்து
சந்திர தத்த னென்னும் வாணிகன்
வங்கஞ் சேர்ந்ததில் வந்துட னேறி
இந்நகர் புகுந்தீங் கிவளொடு வாழ்ந்து
தன்மனை நன்பல தானமுஞ் செய்தனன்

### ஆதிரை பிச்சையிடல்

ஆவ்வன மாகிய ஆதிரை கையால்
பூங்கொடி நல்லாய் பிச்சை பெறுகென
மனையகம் புகுந்து மணிமே கலைதான்
புனையா வோவியம் போல நிற்றலுந்
தொழுது வலங்கொண்டு துயரறி கிளவியோ
டமுத சுரபியின் அகன்சுரை நிறைதரப்
பாரக மடங்கலும் பசிப்பிணி யறுகென
ஆதிரை யிட்டன ளாருயிர் மருந்தென்.

---

# 3. கம்பர் இராமயணம்

கம்பர் இராமயணம் என்பது கம்பரது இராமாய யணம் என ஆரும் வேற்றுமைத் தொகையாக விரியும் கம்பரால் இயற்றப்பட்ட இராமாயணம் என்று பொருள் கொண்டு மூன்ரும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகவும் கொள்ளலாம். இந்நூல் வான்மீகி இராமாயணத்தை முதனூலாகக் கொண்டு இயற்றப் பெற்றுள்ளது. எனினும் தமிழ்ப் பண்பாட்டிற் கேற்பக் கம்பர் பல மாற்றங்களைச் செய்து இக்காவியத்தை இயற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இக் காவியத்திற்குக் கம்பரிட்ட பெயர் இராமாவ தாரம் என்பது. இந்நூல் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங் களைக் கொண்டது. உட்பிரிவுகள் படலம் என்ற பெயரின. கம்பர் மனக் கண்ணில் கதை நிகழும் கங்கை நாடும், கங்கை ஆறும் சோழநாடும் காவிரி ஆறுமாகவே காட்சி யளிக்கின்றன. அவர் கூறும் அரசியலமைப்புச் சோழ அரசியலை ஒத்துள்ளது. இங்ஙனம் நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் அமையக் கம்பர் காப்பியத்தை நடத்திச் செல்கின்ருர். இந் நூலின் காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்ருண்டாகும். பல்வேறு பாடங்களை ஒப்பு நோக்கி திருந்திய பாடங்களோடும் உரையோடும் இராமா யணத்தை 16 தொகுதிகளான செம்பதிப்பை அண்ணமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது.

பாடப்பகுதி பாலகாண்டத்தில் கையடைப் படலம். கையடை என்ற செரல்லுக்கு அடைக்கலம் என்பது பொருள். த ய ர த ம ா ம ன் ன ன் தம்மக்கள் இராம இலக்குவரை விசுவாமித்திர முனிவனிடத்தில் அடைக் கலப்படுத்திய செய்தியைக் கூறுவதாகும்.

# கம்பர் இராமாயணம்

## கையடைப்படலம்

### தயரதனும் விசுவாமித்திர முனிவனும்

1 நனிவரு கற்பக நாட்டு நன்னகர்
அனைவரு மணைதர வயிர்க்குஞ் சிந்தையான்
நினையவு மரியது விசும்பி னீண்டதோர்
புனைமணி மண்டபம் பொலிய வெய்தினன்

### தயரதன் அரியணையில் வீற்றிருத்தல்

2 தூயமெல் லரியணைப் பொலிந்து தோன்றினன்
சேயிரு விசும்பிடைத் திரியுஞ் சாரணர்
நாயக னிவன்கொலென் றயிர்த்து நாட்டமோர்
ஆயிர மில்லையென் றைய நீங்கினர்

3 மடங்கல்போன் மொய்ம்பினன் முன்னர் மன்னுயிர்
அடங்கலு முலகும்வே றமைத்துத் தேவரோடு
இடங்கொளுன் முகனையும் படைப்ப னீண்டெனத்
தொடங்கிய துணியுறு முனிவன் தோன்றினன்

4 வந்துமுனி யெய்துதலு மார்பினணி யாரம்
அந்தர தலத்திரவி யஞ்சலொளி விஞ்சக்

கந்தமல ரிற்கடவுள் தன்வரவு காணும்
இந்திரனெ னக்கடிதெ ழுந்தபடிப ணிந்தான்

5 பணிந்துமணி செற்றுபு குயிற்றியவிர் பைம்பொன்
அணிந்ததவி சிட்டதி லருத்தியொ டிருத்தி
இணைந்தகம லச்சரண ருச்சனைசெய் தின்றே
துணிந்த தென்வினைத் தொடரெனத்தொழுது சொல்லும்

## முனிவன் புகுதல்

6 நிலஞ்செய்தவ மென்றுணரி னன்றுநெடி யோயென்
நலஞ்செய் வினையுண்டெனினு மன்றுநகர் நீயான்
வலஞ்செய்துவ ணங்கவெளி வந்தவிது முந்தென்
குலஞ்செய்தவ மென்றினிது கூறமுனி கூறும்

7 என்னனைய முனிவரரு மிமையவரு
மிட்டூரென் றுடைய ராலும்
பன்னகமு நகுவெள்ளிப் பணிவரையும்
பாற்கடலும் பதுமபீடத்
தன்னகருங் கற்பகநாட்டணி நகரு
மணிமாட வயோத்தி யென்னும்
பொன்னகரு மல்லாது புகலுண்டோ
இகல் கடந்த புலவுவேலோய்

8 இன்றனிர்க்கற் பகநறுந்தே னிடைதுளிக்கு
நிழலிருக்கை யிழந்து போந்து
நின்றளிக்குந் தனிக்குடையி னிழலொதுங்கிக்
குறையிரந்து நிற்ப நோக்கிக்
குன்றளிக்குங் குலமணித்தோட் சம்பரனைத்
குலத்தோடுந் தொலைத்து நீகொண்டு
அன்றளித்த வரசன்றோ புரந்தரனின்
ருள்கின்ற தரசவென்றான்

### தயரதன் 'யான் செய்யவேண்டிய பணிவிடை யாது? எனல்

9 உரைசெய்யு மளவினவன் முகநோக்கி
யுள்ளத்தி னொருவராலும்
கரைசெய்ய வரியதொரு பேருவகைக்
கடல்பெருகக் கரங்கள் கூப்பி
அரசெய்தி யிருந்தபய னெய்தினன்மற்
றினிச் செய்வ தருளு கென்று
முரசெய்து கடைத்தலையான் முன்மொழியப்
பின்மொழியு முனிவ னுங்கே

### இராமனையனுப்புக என்று முனிவன் கூறல்

10 தருவனத்துள் யானியற்றுந் தகைவேள்விக்
கிடையூருத் தவஞ்செய் வோர்கள்
வெருவரச்சென் றடைகாம வெகுளியென
நிருதரிடை விலக்கா வண்ணஞ்
செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர்
நால்வரினுங் கரியசெம்மல்
ஒருவனைத் தந்தீதியெனவுயிரிரக்குங் கொடுங்கூற்றி
னுளையச் சொன்னான்

### தயரதன் வருந்திக்கூறல்

11 எண்ணிலா வருந்தவத்தோ னியம்பியசொன்
மருமத்தி னெறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனனுழைந்தா
லெனச்செவியிற் புகுதலோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
வாருயிர்நின் றூசலாடக்
கண்ணிலான் பெற்றிழந்தா லெனவுழந்தான்
கடுந்துயரங் காலவேலான்

12 தொடையூற்றிற் றேன்றுளிக்கு நறுந்தாரா
ஞெருவண்ணந் துயர நீங்கிப்
படையூற்ற மிலன்சிறிய னிவன்பெரியோய்
பணியிதுவேற் பணிநீர்க் கங்கை
புடையூற்றுஞ் சடையானும் புரந்தானும்
நான்முகனும் புகுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூரு யான்காப்பென்
பெருவேள்விக் கெழுக வென்றான்

விசுவாமித்திரன் பெருஞ்சினம்

13 என்றனனென்றலு முனிவோ டெழுந்தனன்
மண்படைத்தமுனி யிறுதிக் காலம்
அன்றெனவா மெனவிமையோ ரயிர்த்தனர்மேல்
வெயில்கரந்த தங்குமிங்கும்
நின்றனவுந் திரிந்தனமீ நிவந்த
கொழுங் கடைப்புருவ நெற்றிமுற்றச்
சென்றன வந் ததுநகையுஞ்
சிவந்தனகண் ணிருண்டனபோய்த் திசைகளெல்லாம்

வசிட்டன் பேச்சு

14 கறுத்த மாமுனி கருத்தை யுன்னிநீ
பொறுத்தி யென்றவற் புகன்று நின்மகற்கு
உறுத்த லாகலா வுறுதி யெய்துநாள்
மறுத்தி யோவென வசிட்டன் கூறினன்

15 பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம்போய்
மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்
ஐய நின்மகற் களவில் விஞ்சைவந்து
எய்து காலமின் றெதிர்ந்த தாமென்றான்

## இராமன் வரவு

16 குருவின் வாசகங் கொண்டு கொற்றவன்
திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்றென
வருக வென்றென னென்ன லோடும்வந்து
அருகு சார்ந்தன னறிவி னும்பரான்

## இராமனையும் இலக்குமணனையும் ஒப்புவித்தல்

17 வந்த நம்பியைத் தம்பி தன்னொடும்
முந்தை நான்மறை முனிக்குக் காட்டிநல்
தந்தை நீதனித் தாயுநீ யிவர்க்கு
எந்தை தந்தன னியைந்த செய்கென்ருன்

## முனிவன் மகிழ்ச்சியோடு புறப்படல்

18 கொடுத்த மைந்தரைக் கொண்டு சிந்தை முந்து
எடுத்த சீற்றம்விட் டினிது வாழ்த்திமேல்
அடுத்த வேள்விபோய் முடித்து நாமெனு
நடத்தன் மேயினன் நவைக்க ணீங்கினன்

## படைக்கருவிகளை எடுத்தல்

19 வென்றி வாள்புடை விசித்து மெய்ம்மைபோல்
என்றுந் தேய்வுருத் தூணி யாத்திரு
குன்றம் போன்றுயர் தோளிற் கொற்றவில்
ஒன்று தாங்கின னுலகந் தாங்கினன்

20 அன்ன தம்பியுந் தானும் மையனும்
மன்ன னின்னுயிர் வழிக்கொண் டாலெனச்
சொன்ன மாதவற் ருெடர்ந்து சாயைபோற்
பொன்னின் மாநகர்ப் புரிசை நீங்கினன்

மூவரும் சரயு ஆற்றைச் சார்தல்

21 வரங்கண் மாசறத் தவஞ்செய் தோர்கள்வாழ்
புரங்க ணேரிலா நகர நீங்கிப்போய்
அரங்கி னுடுவார் சிலம்பி னன்னநின்று
இரங்கு வார்புனற் சரயு வெய்தினர்

22 கரும்பு கால்பொரக் கழனி வார்ந்ததேன்
வரம்பு மீறிடு மருத வேலிவாய்
அரும்பு கொங்கையா ரம்மெ லோதிபோல்
சுரும்பு வாழ்வதோர் சோலை வைகினர்

காலைப்பொழுதில் அவர்கள் ஆற்றைக் கடத்தல்

23 தாழு மாமழை தழுவு நெற்றியால்
சூழி யானைபோல் தோன்று மால்வரைப்
பாழி மாமுகட் டுச்சிப் பச்சைமா
ஏழு மேறப்போ யாறு மேறினர்

24 தேவு மாதவற் ரெழுது தேவர் தம்
நாவு ளாவுதி நயக்கும் வேள்விவாய்த்
தாவு மாபுகை தழுவு சோலைகண்டு
யாவ தீதென்று னெவர்க்கு மேனின்றுன்.

# 4. முத்தொள்ளாயிரம்

முடியுடை வேந்தர் மூவரையும் பற்றி, அவர்தம் நாடு, நகர், யானை, குதிரை, வென்றி, கொடை, புகழ் இன்பம் முதலிய உறுப்புக்களைப் புகழ்ந்து பாடுவது இந்நூலாகும். மூவேந்தர்களையும் பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்கள் (3 × 900 = 2700) கொண்ட நூல் எனப் பொருள்படும். மூன்றாகிய தொள்ளாயிரம் எனச் சிலர் பொருள்கொள்வர். ஒவ்வொருவரும் முந்நூறு பாடல்களைப் பெறுவர். எவ்வாறாயினும் இப்பொழுது கிடைப்பன நூற்றைம்பது வெண்பாக்களேயாம். இவ் வெண்பாக்கள் புறத்திரட்டு என்னும் தொகை நூலில் கிடைக்கின்றன. உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டிய சிறப்புடையது இந்நூல். முத்தொள்ளாயிரத்தை ஒட்டியே வச்சத் தொள்ளாயிரம், அரும்பைத் தொள்ளாயிரம் என்ற நூல்கள் தோன்றியிருக்கலாம் என்பர். முத்தொள்ளாயிரத்தை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இதன் காலம் கி. பி. 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டாகலாம்.

## முத்தொள்ளாயிரம்

### சேரன்

#### நாட்டு வளம்

அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப்—புள்ளினந்தங்

கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கவ்வை யுடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கோதை நாடு.

சேரன்உலாவருதல்

ஆய்மணிப் பைம்பூ ணலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தேன்—நாணிப்
பெருஞ்செல்வ ரில்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேருமென் னெஞ்சு.

பாண்டியன்

கூடலிழைத்தல்

கூடற் பெருமானைக் கூடலார் கோமானைக்
கூடப் பெறுவேனேற் கூடென்று—கூட
லிழைப்பாள்போற் காட்டி யிழையா திருக்கும்
பிழைப்பிற் பிழைபாக் கறிந்து.

யானை மறம்

மருப்பூசி யாக மறங்கனவேன் மன்ன
குருத்தகு மார்போலை யாகத்—திருத்தக்க
வையக மெல்லா மெமதென் றெழுதுமே
மொய்யிலைவேன் மாறன் களிறு.

சோழன்

பகைவர் நாட்டழிவு

இரியன் மகளி ரிலைஞெமலு ளீன்ற
வரியிளஞ் செங்காற் குழவி—யரையிரவி

னூமன்பா ராட்ட வுறங்கிற்றே செம்பியன்றன்
நாமம்பா ராட்டாதார் நாடு.

பிறந்த நாட் சிறப்பு

அந்தண ராவொடு பொன்பெற்றூர் நாவலர்
மந்தரம்போன் மாண்ட களிறூர்ந்தார்—எந்தை
யிலங்கிலேவேற் கிள்ளி யிரேவதிநா ளென்னே
சிலம்பிதன் கூடிழந்த வாறு.

---

# 5. கலிங்கத்துப்பரணி

பரணி என்பது தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங் களுளொன்று. போரில் ஆயிரம் ஆண் யானைகளை வென்ற வீரனைச் சிறப்பித்துப் பாடுவது. கடவுள் வாழ்த்து கடை திறப்பு, காடு பாடுதல் முதலிய உறுப்புக்களோடு பாட்டுடைத் தலைவனின் இயல்பு, சிறப்பு, வெற்றி முதலியவற்றைப் புறப்பொருள் தோன்றப்பாடுதல்.

சோழன் குலோத்துங்கன் கலிங்க நாட்டின்மீது படையெடுத்துச் சென்று வென்ருன். இக்கலிங்கம் போர்க்களத்தில் பரணி நாளில் பேய்கள் கூழ் சமைத்துத் தேவியை வழிபட்டு உண்டு மகிழ்ந்த சிறப்பைக் கூறு வதால் இந்நூல் கலிங்கத்துப்பரணி என்று பெயர் பெற்றது. இப்பரணியே பரணி நூல்களுள் முதன்மை யானது.

இந்நூலினை இயற்றிய ஆசிரியர் 'பரணிக்கோர் சயங்கொண்டான்' என்று சிறப்பிக்கப்பட்ட சயங்கொண்டாராவர். இவர் சோழநாட்டில் நன்னிலத்தை யடுத்த தீபங்குடியில் பிறந்தவர். கவிச்சக்கரவர்த்தி என்று பட்டம் பெற்றவர். கி. பி. 11–ஆம் நூற்றாண்டினர்.

நம் பாடப்பகுதி 'காடு பாடியது' என்ற பகுதி. காளிதேவி கோயில் கொண்டிருக்கும் காட்டைப் பாடியமையால் காடு பாடியது என்று பெயர் பெற்றது. காடு என்பது இங்கே பாலை நிலத்தைக் குறிக்கும். இப்பகுதியில் இவ்வாசிரியர் பாலைநிலத்திற்குரிய பலவகை மரங்களையும், விலங்குகளையும், பறவைகளையும் சிறப்பித்துக் கூறுகின்றார். இப்பகுதி 22 செய்யுட்கள் கொண்டது.

## கலிங்கத்துப்பரணி

### காடு பாடியது

1 களப்போர் விளைந்த கலிங்கத்துக்
கலிங்கர் நிணக்கூழ் கவப்பேயின்
உளப்போ ரிரண்டு நிறைவித்தாள்
உறையுங் காடு பாடுவாம்

### மரங்களின் நிலை

2 பொரிந்த காரை கரிந்த சூரை
புகைந்த வீரை யெரிந்தவேய்
உரிந்த பாரை யெரிந்த பாலை
உலர்ந்த வோமை கலந்தவே

3 உதிர்ந்த வெள்ளி லுணங்கு நெல்லி
ஒடுங்கு துள்ளி யுலர்ந்தவேல்
பிதிர்ந்த முள்ளி சிதைந்த வள்ளி
பிளந்த கள்ளி பரந்தவே

4 வற்றல் வாகை வறந்த கூகை
மடிந்த தேறு பொடிந்தவேன்
முற்ற லீகை முலிந்த விண்டு
முரிந்த புன்கு நிரைந்தவே

நிலப் பிளவுகள்

5 தீய வக்கொடிய கான கத்தரை
பிறந்த வாய்தொறு நுழைந்துதன்
சாயை புக்கவழி யாதெ னப்பரிதி
தன்க ரங்கொடு திளைக்குமே

பாலைவன நிழல்

6 ஆடு கின்றசிறை வெம்ப ருந்தினிழல்
அஞ்சி யக்கடு வனத்தைவிட்
டோடு கின்றநிழ லொக்கு நிற்குநிழல்
ஓரி டத்துமுள வல்லவே

7 ஆத வம்பருகு மென்று நின்றநிழல்
அங்கு நின்றுகுடி போனதப்
பாத வம்புனல் பெருது ணங்குவன
பருகு நம்மையென வெருவியே

பறவைகள், விலங்குகள்

8 செந்நெ ருப்பினைத் தகடு செய்துபார்
செய்த தொக்குமச் செந்த ரைப்பரப்

பந்நெ ருப்பினிற் புகைதி ரண்டதொப்
பல்ல தொப்புரு வதனி டைப்புரு

9 தீயின் வாயினீர் பெறினு முண்பதோர்
சிந்தை கூரவாய் வெந்து வந்துசெந்
நாயின் வாயினீர் தன்னை நீரெனு
நவ்வி நாவினு னக்கி விக்குமே

வெப்பக்கொடுமை

10 இந்நி லத்திலோ ரேக லாவதற்
கெளிய தானமோ வரிய வானுளோர்
அந்நி லத்தின்மேல் வெம்மை யைக்குறித்
தல்ல வோநிலத் தடியி டாததே

11 இருபொழுது மிரவிபசும் புரவிவிசும்
பியங்காத தியம்பக் கேளீர்
ஒருபொழுதுந் தரித்தன்றி யூடுபோ
கரிதணங்கின் காடென் றன்றே

12 காடிதனைக் கடந்துமெனக் கருமுகிலும்
வெண்மதியுங் கடக்க வப்பால்
ஓடியிளைத் துடல்வியர்த்த வியர்வன்றே
உகுபுனலும் பணியு மையோ

13 விம்முகடு விசைவனத்தின் வெம்மையினைக்
குறித்தன்றே விண்ணோர் விண்ணின்
மைம்முகடு முகிற்றிரையிட் டமுதவட்டம்
ஆலவட்ட மெடுப்ப தையோ

14 நிலம்புடைபேர்ந் தோடாமே
நெடுமோடி நிறுத்தியபேய்
புலம்படுநின் றுயிர்ப்பனபோல்
புகைந்துமரங் கரிந்துளவால்

15 வற்றியபேய் வாயுலர்ந்து வறணாக்கை நீட்டுவபோல்
முற்றியநீண் மரப்பொதும்பின் முதுப்பாம்பு புறப்படுமே

16 விழிசுழல வருபேய்த்தேர் மிதந்துவரு நிரந்நீர்ச்
சுழிசுழல வருவதெனச் சூறைவளி சுழன்றிடுமால்

17 சிதைந்தவுடற் சுடுசுடலைப் பொடியைச் சூறை
சீத்தடிப்பச் சிதறிவைப் பொடியாற் செம்மை
புதைந்தமணி புகைபோர்த் தழலே போலும்
போலாவேற் பொடிமூடுதணலே போலும்

மூங்கில் முத்துக்கள்

18 மண்ணோடி யறவறந்து துறந்தங் காந்த
வாய்வழியே வேய்பொழியு முத்த மவ்வேய்
கண்ணோடிச் சொரிகின்ற கண்ணீ ரன்றேற்
கண்டிரங்கிச் சொரிகின்ற கண்ணீர் போலும்

19 வெடித்தகழை விசைதெறிப்பத் தரைமேன்முத்தம்
வீழ்ந்தனவத் தரைபுழுங்கி யழன்று மேன்மேற்
பொடித்தவியர்ப் புள்ளிகளே போலும் போலும்
போலாவேற் கொப்புளங்கள் போலும் போலும்

காற்றின் வெப்பம்

20 பல்காற்றின் டிரைக்கரங்கள் கரையின் மேன்மேற்
பாய்கடல்க ணுக்குமதப் படர்வெங் கானில்
செல்காற்று வாராமற் காக்க வன்றோ
திசைக்கரியின் செவிக்காற்று மதற்கே யன்றோ

சோழன் வெற்றிச் சிறப்பு

21 முள்ளாறுங் கல்லாறுந் தென்ன ரோட
முன்னொருநாள் வாளபயன் முணிந்த போரின்

வெள்ளாறுங் கோட்டாறும் புகையான் மூட
வெந்தவன மிந்தவன மொக்கி லொக்கும்

22 அணிகொண்ட குரங்கினங்க ளலேகடலுக் கப்பாலே
மணலொன்று காணுமல் வரையெடுத்து மயங்கினவே

---

# 6. மதுரைக் கலம்பகம்

மதுரையினது கலம்பகம் என விரிதலின் ஆரும்வேற்றுமைத் தொகையாகும். கலம்பகமாவது ஒருபோகும் வெண்பாவும் கலித்துறையும் முதலிற் கூறி பின்னர் புயவகுப்பு முதலிய பதினெட்டுறுப்புக்களும் பிச்சியார் முதலியனவும் பொருந்துமாறு நால்வகைப்பாக்களும் பாவினங்களும் கலந்துவர அந்தாதித்தொடையால் பாடப்படுவது. இக்கலம்பகம் மதுரையில் கோயில் கொண்டு மீனுட்சி அம்மையொடு எழுந்தருளியுள்ள சோம சுந்தரக்கடவுளைப் பற்றிப் பாடப்பெற்ற நூலாகும்.

இந்நூலினையியற்றியவர் குமரகுருபரர். இவர் கி.பி. 17ஆம் நூற்ருண்டினர். பாண்டிநாட்டில் தாமிரபரணி நதிக்கரையிலுள்ள சீவைகுண்டத்தில் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவர். இவர் பாடிய பிறநூல்கள் திருச்செந்தூர் கந்தர் கலிவெண்பா, மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ், நீதிநெறிவிளக்கம், திருவாரூர் நான்மணிமாலே, சிதம்பரச் செய்யுட்கோவை முதலியன,

பாடப்பகுதியில் அமைந்துள்ள செய்யுட்களில் மதுரையில் வளையல் விற்ற இறைவன் மீது தலைவி மையல் கொண்டதும், இறைவனுடிய பாண்டரங்கக் கூத்தும், தலைவி யிரங்கல், செவிலியிரங்கல் என்பனவும், புய வகுப்பும் கூறப்பட்டுள்ளன.

# மதுரைக் கலம்பகம்

## வளையல் விற்ற ஈசர் மேல் மையல்

1 வலங்கொண்ட மழுவுடையீர் வளைகொண்டு
விற்பீர்போன் மதுரை மூதூர்க்
குலங்கொண்ட பெய்வளையார் கைவளையெல்லாங்
கொள்ளை கொள்கின் றீராற்
பலங்கொண்ட செட்டுமக்குப் பலித்ததுநன்
ருனீரிப் பாவை மார்க்குப்
பொலங்கொண்ட வரிவளைகள் விற்பதற்கோ
கொள்வதற்கோ புறப்பட்டீரே

## பாண்டரங்கக் கூத்து

2 பட்டிருக்கத் தோலசைஇப் பாண்டரங்கக் கூத்தாடு
மட்டிருக்கு நீப வனத்தானே கட்ட
விரும்பரவத் தானே நின் மென்மலர்த்தா ளன்றே
தரும்பரவத் தானே தனை

## தலைவி இரங்கல்

3 தனியிருப்பவ ரென்படு வார்கெட்டேன் சற்று
நீதியோன் றற்றவிவ் வூரில்யா
மினியிருப்ப வொண்ணுது மடந்தைமீ ரிடம
ருங்குஞ்ச டைமருங் கும்மிரு

கனியிருக்குங்க டம்பவ னேசஞர் கண்பு
குந்தென்க ருத்துளி ருக்கவும்
பனியி ருக்கும்பி றைக்கூற்ற முற்றியென்பாவி
யாவியை வாய்மடுத் துண்பதே

## செவிலி இரங்கல்

4 உண்ணமுத நஞ்சாகி லொண்மதுரைச் சொக்கருக்கென்
பெண்ணமுது நஞ்சேயோ பேதைமீர் — தண்ணிதழி
யிந்தா நிலமே வெனச்சொலா ரென்செய்வான்
மந்தா நிலமே வரின்

## புய வகுப்பு

### (முதலடி)

5 வரியளி பொதுளிய விதழியொ டமரர்
மடந்தையர் நீல வனம்புக் கிருந்தன
மதியக டுடைபட நெடுமுக டடைய
நிமிர்ந்த பொன் மேரு வணங்கப் பொலிந்தன
மழகதிர் வெயில்விட வொளிவிடு சுடர்வ
லயங்கொடு லோக மடங்கச் சுமந்தன
மதுகையொ டடுதிறன் முறைமுறை துதிசெய்
தண்கவ ராடு துணங்கைக் கிணங்கின

### (இரண்டாமடி)

பொருசம ரிடையெதிர் பிளிறுமொர் களிறு
பிளந்தொரு போர்வை புறஞ்சுற்றி நின்றன
புகையெழ வழலுமிழ் சுழல்விழி யுழுவை
வழங்குமொ ராடை மருங்குற் கணிந்தன
புலவெயி றயிறரு குருதியோ டுலவு
மடங்கலின் வீர மொடுங்கத் துரந்தன
புகலியர் குரிசில்பண் ணுெடுதமி ழுருமை
யறிந்தொரு தாளம் வழங்கப் புகுந்தன

மூன்றுமடி

உருமிடி யெனவெடி படவெதிர் கறுவி
நடந்தொரு பாண ஞெதுங்கத் திரிந்தன
வுருகிய மனமொடு தழுவியொர் கிழவி
கருந்துணி மேலிடு வெண்பிட் டுகந்தன
வுறுதியொ டவண்வளை புகும்வகை கடிது
சுமந்தொரு கூடைம ணுந்திச் சொரிந்தன
வுருவிய சுரிகையொ டெதிர்வரு செழியர்
பிரம்படி காண நடுங்கிக் குலைந்தன

நான்காமடி

தருசுவை யமுதெழ மதுரம தொழுகு
பசுந்தமிழ் மாலை நிரம்பப் புணைந்தன
தளிரியன் மலைமகள் வரிவளை முழுகு
தழும்பழ காக வழுந்தக் குழைந்தன
தளர்நடை யிடுமிள மதலையின் மழலை
ததும்பிய வூற லசும்பக் கசிந்தன
தமிழ்மது ரையிலொரு குமரியை மருவு
சவுந்தர மாறர் தடம்பொற் புயங்களே

---

# 7. நால்வர் நான்மணிமாலை

நால்வர் நான்மணிமாலை என்பது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற சைவசமயக் குரவர்கள் நால்வர் மீது பாடப்பெற்ற நான்மணிமாலை என்று பொருள்படும். நான்மணிமாலை என்பது தொண்ணூற்ருறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்று.

முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் என்ற நால்வகை மணிகளால் அமைக்கப்பெற்ற மாலையைப் போன்று வெண்பா, ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம், கட்டளைக் கலித்துறை என்ற நால்வகை யாப்புக்களால் இயற்றப் பெறுதலின் நான்மணிமாலை என்று பெயர்பெற்றது. சமயக் குரவர்கள் ஒவ்வொருவர் மீதும் 10 பாடல்கள் என்ற அமைப்பில் 40 பாக்களைக் கொண்டது.

இதனை இயற்றியவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சாமிகள் ஆவர். இவர் கற்பனைக் களஞ்சியம் என்று போற்றப் பெறுபவர்; வீரசைவ சமயத்தினர், இவர் வாழ்ந்த காலம் கி. பி. 17 ஆம் நூற்றுண்டு. சோண சைவமாலை, திருவெங்கைக் கோவை, திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கை உலா, திருவெங்கை அலங் காரம், திருச்செந்தில் நிரொட்டகயமக அந்தாதி, பிரபு லிங்க லீலை, நன்னெறி முதலியன இவர் பாடிய பிற நூல்களாகும்.

பாடப் பகுதியில் முத்தி என்பது ஞானசம்பந்தர் திருவடியே என்பதும், நாவுக்கரசர் தேவாரம் முத்திக்கு வாயில் என்பதும், சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட செய்தியும், வேதத்தினும் திருவாசகம் நெஞ்சினை உருக்கவல்லது என்பதும் எடுத்து மொழியப் பெற் றுள்ளன.

# நால்வர் நான்மணிமாலை

## திருஞானசம்பந்தரின் திருவடியே வீடு

1 பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு — நாவான்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் றண்டை
வெறித்தண் கமலமே வீடு

## முத்திக்கு வித்திய வழியே திருநாவுக்கரசர் தேவாரம்

2 வீட்டிற்கு வாயி லெனுந்தொடை சாத்துசொல் வேந்தபொது
ஆட்டிற்கு வல்ல னொருவற்கு ஞான வமுதுதவி
நாட்டிற் கிலாத குடர்நோய் நினக்குமு னல்கினுமென்
பாட்டிற்கு நீயு மவனுமொப் பீரெப் படியினுமே

## ஆரூரர் பாட்டும் அதில் திளைக்கும் பரமனும்

3 படியிலா நின்பாட்டி லாரூர
நனிவிருப்பன் பரம னென்ப
தடியனே னறிந்தனன்வான் றொழுமீச —
நினைத்தடுத்தாட் கொண்டு மன்றித்
தொடியுலா மென்கைமட மாதர்பால்
நினக்காகத் தூது சென்று
மிடியிலா மனைகடொறு மிரந்திட்டு
முழன்றமையால் விளங்கு மாறே

## வாசகத் தேனும் ஆரண மொழியும்

4 விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ

வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனே
யாதோ சிறந்தது வென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேன்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே.

---

## 8. திருக்குற்றுலக் குறவஞ்சி

திருக்குற்றுலக் குறவஞ்சி என்பது திருக்குற்றுலத்தில் குறக்குடியில் பிறந்த வஞ்சிக்கொடி போன்ற குறத்தியின் தன்மைகளைக் கூறும் நூல் என்று பொருள் படும்.

பாண்டிநாட்டுத் திருநகர்கள் பதினுன்கனுள் ஒன்ருகத் திகழ்வது திருக்குற்றுலமாகும். இது திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த தென்காசி வட்டாரத்திலுள்ளது. இத்தலத்தில் குறும்பலா மரத்தினடியில் சிவபிரான் கோயில் கொண்டுள்ளார். ஐந்து சபைகளுள் ஒன்ருன சித்திரசபை இங்குள்ளது குறிப்பிடத்தக்கது.

குறம் என்ருலும் குறவஞ்சி என்ருலும் ஒரே பொருளன. குறம் என்பது தமிழில் உள்ள தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்ருகும். இந்நூல் நாடக வகையைச் சேர்ந்தது. குறவஞ்சி அமைப்பில் இந்நூல் தலைமையிடம் பெறுவது. இந்நூலில் கடவுள் வணக்கம் உட்பட 129 பாடல்கள் காணப்படுகின்றன.

இந்நூலினை இயற்றியவர் திரிகூடராசப்பக்கவிராயர் ஆவர். இவர் திருநெல்வேலி மாவட்டம் தென்காசியை அடுத்துள்ள மேலகரம் என்னும் ஊரில் பிறந்தவர். மதுரையில் ஆட்சி செய்த முத்துவிசயரங்கசொக்கநாத நாயக்கர் காலத்தவராதலால் கி. பி. 18 ஆம் நூற்ருண்டைச் சேர்ந்தவர். திருக்குற்ருலத் தலபுராணம், திருக்குற்ருலமாலை, திருக்குற்ருல உலா, திருக்குற்ருலக் கோவை, திருக்குற்ருலப்பிள்ளைத்தமிழ் முதலிய பதின்மூன்று நூல்கள் இவரால் இயற்றப் பெற்றுள்ளன.

பாடப்பகுதி சைவ சமயக் குரவர்கள் நால்வர் அகத்தியர், கலைமகள் வாழ்த்தாக அமைந்துள்ளது. நூற்பயன் பற்றிய செய்தியும் கூறப்பட்டுள்ளது.

## திருக்குற்ருலக் குறவஞ்சி

### சைவசமயாசாரியர் நால்வருள் மூவர்

1 தலையிலே ஆறிருக்க மாமிக் காகத்
தாங்குகட லேழழைத்த திருக்குற்ருலர்
சிலையிலே தடித்ததடம் புயத்தை வாழ்த்திச்
செழித்தகுற வஞ்சிநா டகத்தைப் பாட

அலையிலே மலைமிதக்க ஏறி ஞனு
மத்தியிலே பூவை அந்நா ளழைப்பித் தானுங்
கலையிலே கிடைத்தபொரு ளாற்றிற் போட்டுக்
கனகுளத்தி லெடுத்தானுங் காப்ப தாமே

அகத்தியமுனிவர், மாணிக்கவாசக சுவாமிகள்

2 நித்தர்திரி கூடலிங்கர் குறவஞ்சி
நாடகத்தை நிகழ்த்த வேண்டி
முத்தர்திரு மேனியெல்லா முருகவே
தமிழுரைத்த முனியைப் பாடி
இத்தரையி லாத்துமம்விட் டிறக்குநாட்
சிலேட்டுமம்வந் தேரு வண்ணம்
பித்தனடித் துணைசேர்ந்த வாதவூ
ரானடிகள் பேணுவோமே.

கலைமகள்

3 அடியிணை மலரும் செவ்வா யாம்பலுஞ் சிவப்பி ஞளை
நெடியபூங் குழலு மைக்கண் ணீலமுங் கறுப்பி ஞளைப்
படிவமும் புகழுஞ் செங்கைப் படிகம்போல் வெளுப்பாம் ஞானக்
கொடிதனைத் திருக்குற் றுலக் குறவஞ்சிக் கியம்பு வோமே.

நூற்பயன்

4 சிலைபெரிய வேடனுக்கும் நரிக்கும் வேதச்
செல்வருக்குந் தேவருக்கு மிரங்கி மேனுட்
கொலைகளவு கட்காமங் குருத்து ரோகம்
கொடியபஞ்ச பாதகமுந் தீர்த்த தாலே
நிலவணிவார் குற்றுலம் நினைத்த பேர்கள்
நினைத்தவரம் பெறுவரது நினைக்க வேண்டிப்
பலவளஞ்சேர் குறவஞ்சி நாடகத்தைப்
படிப்பவர்க்குங் கேட்பவர்க்கும் பலனுண் டாமே

அவையடக்கம்

5 தாரினை விருப்ப மாகத் தலைதனில் முடிக்குந் தோறும்
நாரினைப் பொல்லா தென்றே ஞாலத்தோர் தள்ளு வாரோ
சீரிய தமிழ்மா லைக்குட் செல்வர்குற் றுலத் தீசர்
பேரினு லெனது சொல்லைப் பெரியவர் தள்ளார் தாமே.

---

# 9. முக்கூடற்பள்ளு

பள்ளு என்பது தொண்ணூற்றுறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இது உழத்தியர்கள் பாடும் பாட்டாகும். பள்ளர்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் புனைந்துறையாகப் பாடப்பெறுவது. கொச்சகக் கலிப்பா, விருத்தம், சிந்து போன்ற சிற்றடிகளாலும் பேரடிகளாலும் அமைந்து வருவது. இப்பாடல்கள் இசையோடு படிப்பதற்கும் நாடகமாக நடிப்பதற்கும் ஏற்றவண்ணம் அமைந்துள்ளன.

முக்கூடல் என்பது திருநெல்வேலிக்குச் சிறிது வடகிழக்கில் தண்பொருநையாறும் சிற்றுறும், காட்டாறும் ஆகிய மூன்று ஆறுகள் கூடும் இடத்தின் வடக்கே அமைந்துள்ள ஊர். இவ்வூர் இப்போது சீவலப்பேரி என்றபெயரால் வழங்குகின்றது. முக்கூடற் பள்ளனுகிய வடிவழகன் வரலாற்றைக் கூறும் பள்ளாகயையால் முக்கூடற்பள்ளு என்று பெயர் பெற்றது. இந்நூல் கரப்புச் செய்யுள் நீங்கலாக 175 செய்யுட்கள் காணப்பெறுகின்றன. இந்நூலினை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல் கி. பி. 17 ஆம் நூற்றுண்டில் எழுந்ததென்பர்.

பாடப்பகுதியில் பொருநையாற்றின் வடகரைச் சிறப்பை மூத்தபள்ளியும், தென்கரைச் சிறப்பை இளைய பள்ளியும் எடுத்துக் கூறுகின்றனர். மூவாறுகளில் ஒன்றாகிய சிற்றாற்றின் வளமும் சிறப்பிக்கப் பெற்றுள்ளது.

# முக்கூடற்பள்ளு

## நாட்டுவளம்

### மூத்தபள்ளி

1 மீது யர்ந்திடுந் தெங்கிள நீரை
மிடைந்த பூகஞ் சுமந்துதன் காயைச்
சூது மொன்றிச் சுமக்கக் கொடுக்குஞ்
சூதந் தன்கனி தூங்கும் பலாவி
லோது மந்தப் பலாக்கனி வாழை
யுளுக்க வேசுமந் தொண்குலை சாய்க்கும்
மாது ளங்கொம்பு வாழையைத் தாங்கும்
வளமை யாசூர் வடகரை நாடே

### இளையபள்ளி

2 பங்க யந்தலை நீட்டிக் குரம்பினிற்
பச்சை இஞ்சியின் பார்சடை தீண்டும்
தங்கு மிஞ்சியும் மஞ்சட் கழுத்தைத்
தடவி மெள்ளத் தொடுமந்த மஞ்ச
ளங்க சைந்திடுங் காய்கதிர்ச் செந்நெ
லளாவி நிற்குமச் செந்நெலு மப்பாற்
செங்க ரும்புக்குக் கைதரும் போல்வளர்
சீவல மங்கைத் தென்கரை நாடே

சிற்ருறு

3 குற்ரு லத்திரி கூட மால்வரை
யுற்றே மேகம் பொழிந்தநீர்
கூடிப் பொருநை நாடித் திருமுக்
கூடற் பதியை வலங்கொண்டே
வற்ரு மடுவிற் பரவை குரவை
வாளை கோளை தேளிமீன்
மயிந்தி யுழுவை யயிந்தி கூனி
மணலி யாரா லோராமீன்
பற்ரு வயிரை கெண்டை கெளிறு
பருவ ராலு மணையிலே
பாயக் காலிற் பாயக் குளத்திற்
பாய வயலிற் பாயவே
சிற்ரு றென்பது பெற்ரு லும்மொரு
சிறிய வர்மனப் பெருமைபோல்
சித்தி ராநதி பெருகி வார
சித்திரம் பாரும் பள்ளீரே.

---

# 10. வள்ளல் அண்ணுமலை

இருபதாம் நூற்ருண்டுத் தமிழகம் கண்ட பெருங் கொடைவள்ளல் அண்ணுமலையரசராவார். இந்திய அரசினராலும் நாட்டின் பொதுமக்களாலும் பல்வேறு மொழிப் புலவர்களாலும் பாராட்டுப் பெற்றவர் வள்ளல் அண்ணுமலையரசர். ஈட்டலுங் காத்தலும், வகுத்தலும் இவர் தம் வாழ்க்கைக் குறிக்கோள். தனிக் கொடையால் பல்கலைக்கழகம் கண்டது, தமிழிசை இயக்கம் கண்டது, தமிழின் வளர்ச்சிக்குப் பல தனித்துறை வகுத்தது, சங்க காலத்து அரசர்களைப் போலத் தமிழ்ப்

புலவர்களைப் புரந்தது, என்றிவை அண்ணாமலையரசரின் சிறப்புப் பணிகளாம். ஆட்சித்திறமை, வினைத்திட்பம் மறவாமை, உயர்வுள்ளல், சொல்லுறுதி, கண்ணோட்டம் என்றிவை அண்ணாமலையரசரின் சிறப்புப்பண்புகள்.

இப் பெருமகனாரின் குணங்களையும் பண்புகளையும் பாராட்டிப் பாடிய புலவர் பலர். அவருள் ஒன்பதின்மர் பாடல்கள் இங்கே தொகுக்கப்பட்டுள்ளன.

## வள்ளல் அண்ணாமலை

1 நண்ணாரும் போற்ற நலம்புரியா நானறியா
அண்ணா மலைக்கழகம் ஆக்கினனால்—எண்ணார்ந்த
எல்லாப் பொருளும் இனிதுதரும் நல்லறிவை
எல்லார்க்கு மேயுதவு மென்று

2 பழிமேல் வெகுளி பரவு புகழிற்
கழிகாமம் தில்லைக் கடவுள்—வழிபாட்டில்
ஊன்றும் உளமயக்கிம் மூன்றுங் கொடைமடத்திற்
கான்றதுணை அண்ணற் கமைந்து

3 தென்னர் தமிழுயரச் செங்கோல் அறம்வளர்த்த
அன்னை கயற்கண்ணிக் கன்புடையான்—மன்னர்
தலைவனண் ணாமலையுந் தன்குடியும் பேரார்
கலைநிலையும் வாழியவே காண்

டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார்

(தரவு)

4 புகழாய பொருளோடு புலமைசால் நலத்தோடு
தகவுகூர் திறமெய்தித் தனிவில்சீர்த் தாளாற்றி

மகம்பல வாற்றியும் மாணறங்க ளாக்கியும்
அகனமர்ந் தளித்திட்டும் முகனமர்த் தியம்பியும்
செகமுள்ள திசையெல்லாஞ் செட்நாட் டிசைசெல்ல
உகப்புடனே வாழ்தரும் உயரண்ணு மலைமன்னே

### தாழிசைகள்

1 முன்னொருநாட் பாரிதான் முல்லைக்குத் தேரளித்தான்
இன்னொருநாட் போலவே எந்நாளுஞ் சோறளிக்கும்
நின்வண்மை இருந்தவா தில்லைமூ வாயிரர்க்கே

2 கரவா திரவலர்க்குக் காரியென்பான் புரவிதந்தான்
இரப்போர்கள் யாவருக்கும் சோறளிக்கப்
பரம்பரையாய்ச் சத்திரங்கள் பரவுதில்லை வைத்தனையே

3 ஆலமர் செல்வற்கே யருங்கலிங்கம் ஆயளித்தான்
மேலவாந் தில்லையில் மேவிடுங் கூத்தன்மால்
ஆயிரு பேர்க்கும்மே யறப்பணி வகுத்தனையே.

4 அருநெல்லிக் கனிதன்னை அதிகமான் கொடுத்திட்டான்
தருகலைகள் பலபயிலுங் கழகந்தே புலவருக்கும்
அருங்கலைகள் பயில்வார்க்கும் பலாயிரங்கள் தந்தனையே.

5 உள்ளிவரும் இரவலர்கட் குவந்தீந்தான் ஒருநள்ளி
உள்ளாதே யிருப்போர்க்கும் உவந்தீயும் வேளண்ணல்
தள்ளாத மாணவர்க்குத் தனியுதவி செய்குவையே.

6 பேகனென்பான் பெருங்கனடன் பீலிக்குப் படாமளித்தான்
ஆகவத்திற் கதிகபணம் அந்நாள்போ லிந்நாளும்
ஆகுலமில் செட்டிநாட் டாரரசே யளித்தனையே.

7 ஆடுவார் மறந்தாரே பாடுதற்கே ஓரியினைப்
பாடல்சொல் பள்ளியினிற் பற்பலரை மன்றுகளில்
ஆடுகொள் நின்பெயர்தான் அடிக்கடியே சொல்லுவரே

(தனிச்சொல்)

என வாங்கு

(சுரிதகம்)

நின்திறம் முற்றும் பாடுநர்க் கடங்கா
அன்னையாந் தமிழை யளிக்கும் வள்ளலே
மன்னரும் விழைசீர் அண்ணுமலையே
துன்னருஞ் சீர்த்தித் துணைவி மக்களொடு
பன்னெடுங் காலம் பாரினுள் வாழ்கவே.

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்

5 ஊருணிநீர் நிறைந்தாற்போல் ஊர்நடுநன்
மரம்பழுத்தே யுதவு மாபோல்
சீர்மைபெறுந் திருவெய்திச் செம்மைநெறி
யறங்கள்பல செழிக்கச் செய்வோன்
பாரறியப் பலகலைகள் வளர்கழகம்
நிறுவியதைப் பாதுகாக்கும்
ஏர்பெறும்எங் குலக்கோமான் செந்தமிழின்
இசைவளர்க்கும் எழிலி போல்வான்

6 எந்நாட்டு மக்களுந்தந் தாய்மொழியில் இசைகற்பர்
இயற்கை யஃதே
தந்நாட்டு மக்களதில் வேறுபடு நிலையோர்ந்து
ஞால மெல்லாம்
முன்னுட்டுந் தமிழிசையை முரணின்றி வளர்த்துதவி
முழுதுஞ் செய்தே
இந்நாட்டில் நிலைநிறுத்த எங்கள்அண்ணு மலைசீர்த்தி
என்றும் வாழ்க.

பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

7 கீதமும் பாட்டுங் கிளரொளிநற் கல்விகளும்
வேதனும் வெள்கிடும் விஞ்ஞான ஓதைகளும்
அண்ணு மலைநகரின் அண்ணலே நின்னிசையென்
றெண்ணுருஞ் சொல்வ ரிசைந்து

8 எத்தனை எத்தனை எண்ணிறந்த மாணவர்கள்
தொத்தினிற்றேன் உண்ணும் தொகைவண்டின் — மொய்த்துளார்
அண்ணு மலையான் அருங்கழகத் தாருவின்கண்
உண்ணுறுந் தேனை யுகந்து

பேராசிரியர் — கோ. சுப்பிரமணிய பிள்ளை

9 நன்றே யென்றும் நினைந்ததனை
நன்றே புரியும் அருந்திறலும்
ஒன்றே கூறும் உளத்தெளிவும்
உறுதிப் பாடும் தெளிந்தார்கண்
சென்றே ஐயம் கொளாச்சீரும்
செறிந்த அண்ணு மலைப்பெரியோன்
இன்றே போலப் பன்னலமும்
இசைந்து வாழ்க பல்லாண்டே

10 இன்பப் பாவாய் உரைவடிவாய்
இறைவன் கோயிற் றிருவுருவாய்
நன்மை வளர் அண்ணுமலைப்பல்
கழக மாகும் நல்லுருவாய்
இன்னும் பலவாப் பேரறத்தின்
எழிலா ருருவாய் இயைந்தபுகழ்
மன்னும் அண்ணு மலைமன்னன்
மகிழ்ந்து வாழ்க பல்லாண்டே

— வித்துவான் ஆ. பூவராகம்பிள்ளை

11 செய்தார் அறம்பல சேயிழை பாகன் திருத்தளிக்கட்
பெய்தார் வணிகர் பெரும்பொரு ளேனும் பெருமநின்போல்
வெய்தா மடமை வறுமை யிவற்றை விலக்கினரார்
மொய்தா ரணிபுகழ் அண்ணு மலைப்பெயர் முன்னவனே

12 கானந் தழைப்பக் கலைத்தமிழ் ஓங்கிடக் கல்விவலார்
மானஞ் சிறப்பக் கலைமாட மொன்று மகிழ்ந்தளித்தான்
வானம் பயிலு முகிற்குங்கற் ருவிற்கு மாமணிக்குந்
தானம் பயிற்றிடுஞ் சீலன் அண் ணுமலைத் தார்ப்புயனே

— இ. சே. வரதராச ஐயர்

13 பொன்படைத்தார் பலருண்டு புவியெங்கும்
தன்னுட்சி பொருந்திக் குன்ரு
மன்படைத்தார் பலருண்டு மண்படைத்தார்
பலருண்டு மக்கள் நெஞ்சில்
தன்மாண்பு படைத்திட்டே என்றென்றும்
அறிவொளியாய் நாளுஞ் சாரும்
பன்மாட்சி புகழ் அண்ணு மலையரசர்
போற்பெருமை படைத்தார் யாரே

14 ஞாயிறுபோற் பலர்போற்றத் திங்கள்போற்
கலைபரப்பிச் செவ்வாய் போல
வாயுறுவார் வாயடக்கி வளர்புதனுய்
வியாழன்போல் விளங்குஞ் சான்ருேர்
தாயுறவே கலைப்பாலைக் காளையர்க்குத்
தந்துவக்குங் கல்வி மன்றம்
மீயுயரும் வெள்ளிவிழா மேவியதால்
பொன்வயிரம் மேவி வாழ்க

— வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர்

அண்ணா மலையின் அகலப் பெருங்கொடையால்
எண்ணாத வாய்ப்பெல்லாம் ஈண்டிக் கிடக்குமிடம்;
பண்ணார் தமிழ்வழங்கும் பல்லார் துறைவளரும்
கண்ணார் இருகுளங்கள் கண்ணாடி போன்றிருக்கும்
அண்ணா மலைநகரைப் பாடாதார் யாருண்டு?
யாழ்நூல் நுனித்தெழுதி ஏழிசை காத்தவன்
வீழ்புலன் வென்ற விபுலாஅ னந்தரும்
செல்வம் கருதாச் சிறந்த தமிழ்ச்செல்வன்
கல்வி நிறைந்தநற் காசுப பிள்ளையும்,
அச்சமோ இல்லான் அருந்தமிழைப் போற்றாரைத்
துச்சமாய்ப் போற்றிய சுந்தர பாரதியும்,
ஏட்டிற் சிறந்த எழில்வா சகமென்னும்
பாட்டின் நயங்கூறு பண்டித மாமணியும்,
துங்கப் பெருமிதத்தன் தோலா உரையாளன்
சங்க நடையாளன் தன்னிகரில் நாட்டாரும்,
ஆரும் தொழத்தக்க அண்ணா மலையரசால்
பாரி கதைதொடுத்த பண்பார் இராகவனும்,
நேர்மை வினைத்திட்பம் நீங்காத் தமிழ்த்துடிப்பு
சீர்மை பொலிந்த சிதம்பர நாதனும்,
நாடுபுகழ் கம்பருக்கு நல்ல பதிப்பெடுத்துக்
கூடுபுகழ் கொண்டவொரு கோசுப பிள்ளையும்
மாசிரியப் பாடங்கள் மதிபெருகச் சொல்வன்மை
ஆசிரியச் செம்மல் அருணா சலனாரும்
போற்றித் தமிழால் புகழ்ந்த மலைநகரை
ஆசிரியர் என்னும் அறிவுலகம் உள்ளவரை
மாணாக்கர் என்னும் மணியுலகம் உள்ளவரை

தில்லைநகர்க் கூத்தன் திரும்பாமல் ஆடுவரை
மல்குதுறை கூடி வளர்கவென வாழ்த்துவமே

— டாக்டர் வ. சுப. மாணிக்கம்

16 சென்ற காலத் தமிழகத்தின்
சிறப்பும் இனிமேல் வருங்காலத்
தென்றும் இன்பம் பெருகுவள
ரியல்பும் தான்வாழ் நிகழ்காலத்
தொன்றுஞ் செயலால் விளக்கமுற
ஓங்கி வளர்பல் கலைக்கழகம்
நன்று நிறுவும் பெருந்தகையை
நாளும் பரவிப் போற்றுதுமே

17 அறிவின் ஆழம் தொழிற்றிறமை
ஆண்மை யழகு நன்மணத்தின்
செறிவென் றினைய வளமெல்லாஞ்
செழிக்கச் செய்யுந் திறம்வாய்ந்த
துறைகள் பலவுந் தன்கண்ணே
தோன்றி வளர்பல் கலைக்கழகம்
இறைவன் அண்ணு மலைபுகழ்போல்
என்றும் நிலவி வாழியரோ.

வித்துவான் — திரு. க. வெள்ளைவாரணன்

# குறிப்புரை

[குறிப்புரையில் வரும் எண்கள்
பாடப்பகுதிச் செய்யுள் எண்களாம்]

## திருக்குறள்

1 வைத்தா - முற்றெச்சம்
சான்ற - நிறைந்த
2 இவறும் - கொடாது
3 இவறி – விரும்பி
இசை – புகழ்
4 நச்சப்படுதல் – விரும்புதல்
கொல்லோ – ஓகாரம் அசை
5 துய்ப்பது – அனுபவிப்பது
துய்ப்பதூஉம் – இன்னிசை யளபெடை
6 ஏதம் - ஆகுபெயர்
7 தமியள் - தனித்தவள்
9 ஒரீஇ – நீங்க; சொல்லிசை யளபெடை
10 வறம் – பஞ்சம்
11 கருமம் – காரியம்
13 சால்பு – தகுதி
14 அணியன்றே - ஓகாரம் எதிர்மறை
பீடு - பெருமிதம்
16 மன் னே – மன், ஓ, அசைச் சொற்கள்
ஞாலம் – உலகம்
17 துறப்பர் – ஒழுகுபவர்; வினையாலணையும் பெயர்
19 கொள்கை – ஒழுக்கம்
20 மருட்டி - மயக்கி
21 கைதூவேன் - முடியாமை யின், முற்றெச்சம்
22 ஆள்வினை - முயற்சி
23 மடி – ஆடை, தொழிலாகு பெயர்
24 குடி – ஆகுபெயர்; உஞற்றுப வர்க்கு – முயல்பவர்க்கு
26 கொளல் – தொழிற்பெயர்
28 மடி - சோம்பல்
29 இடும்பை – துன்பம்
உழந்தும் - வருத்தமுற்றும்
31 ஏகதேச உருவகம்
34 அலகு – கதிர்
35 கரவாது – மறையாது
36 விழைவதூஉம் - இன்னிசை யளபெடை
37 உணக்குதல் – காயவிடுதல்
பிடித்து - பிடித்த என்பதன் விகாரம்
39 புலந்து – வெறுத்து
செல்லுதல் - ஆகுபெயர்
40 அசைஇ - வினைஎச்சம்; சொல்லிசையளபெடை
இலம் - வறியதன்மை

| | |
|---|---|
| 43 தோல் – சொல் | 48 நிரப்பு – வறுமை |
| 45 பல்குரை – இசைநிறை | 49 துஞ்சல் – தூங்குதல் |
| 46 நல்கூர்ந்தார் – வறுமை யுற்ருர் | 50 துப்புரவு - நுகரப்படும் பொருள் |
| 47 நல்குரவு – பண்பாகுபெயர் | |

1 நன்றியில் செல்வம் :–

1 ஈட்டியவனுக்குப் பயன்படாமை
2, 3, 4 பிறர்க்குப் பயன்படாமை
5, 6, ஈட்டியானுக்கும் பிறர்க்கும் பயன்படாமை
7, 8, 9, 10 நன்றியில் செல்வத்தின் குற்றம்

2 நாணுடைமை :-

1 நாணத்தின் இலக்கணம்
2, 3, 4 நாணத்தின் சிறப்பு
5 நாணமுடையாரின் சிறப்பு
6, 7 நாணமுடையார் செயல்
8, 9, 10 நாணமில்லாதார் இழிவு

3 குடிசெயல் வகை :-

1, 2 குடியை உயர்த்துவதற்குக் காரணம்
3, 4 குடியை உயர்த்துவார்க்குத் தெய்வம் துணையாதல்
5, 6, 7 குடியை உயர்த்துவான் அடையும் சிறப்பு
8, 9 குடியை உயர்த்துவார் செயல்
10 உயர்த்துவாரில்லார்க்குக் குடியின் குற்றம்

4 உழவு :-

1 உழவின் சிறப்பு
2, 3, 4, 5, 6 உழவர் சிறப்பு

7, 8, 9 உழவு செய்யும் முறை
10 உழவு செய்யாவழி வரும் குற்றம்

5 நல்குரவு :-

1, 2, 3, 4, 5 நல்குரவின் கொடுமை
6, 7, 8, 9 நல்கூர்ந்தார் குற்றம்
10 நல்கூர்ந்தார் செய்யவேண்டியது.

## மணிமேகலை

1 விஞ்சையர் – தேவர்
2 பூங்கொடி – பண்புத்தொகை
4 தகவிலன் - நன்னடக்கையிலான்
5 அகன்றனன் – முற்றெச்சம்
6 கைத்தூண் - தீய ஒழுக்கத்தால் வந்த உணவு
7 வான்பொருள் – உரிச்சொற்றொடர்
9 கணிகை - விலைமகள்
10 கானம் - பொன்
11 வங்கம் - கப்பல்
12 செல்வுழி – வினையெச்சம்
13 முந்நீர் – பண்புத்தொகை
முந்நீர் – கடல்
14 ஓடிமரம் - வினைத்தொகை
16 பான்மையன் – முற்றெச்சம்
17 நன்மரம் – பாய்மரம்
19 எறிதிரை - வினைத்தொகை
23 ஈமம் - சவஞ்சுடும் நெருப்பு
24 சாற்றினள் – முற்றெச்சம்
25 சுடலைக்கான் - சுடுகாடு
26 முடலை விறகு – குறுக்குடைய காய்ந்த விறகு
27 உய்ப்ப - செய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்
28 புக்குழி - செலுத்த
29 பாயற்பள்ளி – வேற்றுமைத் தொகை
30 கூறை – ஆடை
31 சாந்தம் – சந்தனம்
32 தொன்னிறம் – பண்புத் தொகை
33 விரை – மணம்
34 செய்யோள் - இலக்குமி
35 கொல்லா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
36 செய்கேன்–தன்மையொருமை வினைமுற்று

37 ஆதிரை – விளி
38 ஊர்திரை – வினைத்தொகை
40 இராஅள் – இசைநிறை யளபெடை
42 வந்தனன் – முற்றெச்சம்
44 அந்தரம் – விண்வெளி
45 உண்கண் – வினைத்தொகை
46 போதுவாள் – வருவாள்
47 கவல்வு – கவலை
48 கடிது - உரிச்சொல்லடியாகப் பிறந்த வினைஎச்சம்
49 தரூஉம் – இசைநிறை அளபெடை
50 மரபு – கற்பொழுக்கம்
51 விரும்பினர் – முற்றெச்சம்
53 பிறங்கல் – மலை
54 மஞ்சு – மேகம்
55 சூர்மலை-வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
56 நயமிலர் – முற்றெச்சம்
57 புலம்பினன் – வருந்தினன்
58 அளியன் – இரங்கத்தக்கவன்
60 மயக்கம் – ஐயம்
61 கடுந்தொழில் – பண்புத் தொகை
66 குழிசி - பானை
67 புணங்கல் - வற்றல்
68 எண்டு – கரடி
70 பான்மையன் – வினையாலணையும் பெயர்
71 உயர்மரம் - வினைத்தொகை
72 ஈங்கு - சுட்டு நீண்டது
73 அலைகடல் - வேற்றுமைத் தொகை
75 வம்மின் - முன்னிலைப் பன்மை வினைமுற்று
77 வெங்கள் - விருப்பத்தைத் தரும் கள்
78 அயர்ந்து - சோர்ந்து
79 வெவ்வுரை - பண்புத்தொகை
80 பெண்டிரும் உண்டியும்– பண்புத்தொகை
81 உறுபயன் - உரிச்சொற் றொடர்
82 காண்டுவம் - தன்மைப் பன்மை வினைமுற்று
83 தூண்டிய - பெயரெச்சம்
84 கோறல் - கொல்லுதல்
85 கயக்கு - கலக்கம்
88 நல்லுலகு - இன்பவுலகு
89 அல்லறம் - தீவினை
90 உரவோர் - அறிஞர்
91 கடுநகை – பண்புத்தொகை
92 ஓடும் உயிர் - பெயரெச்சத் தொடர்
95 செவ்வனம் - நன்றாக
96 உடலுயிர் - வேற்றுமைத் தொகை
98 தடிந்து - வெட்டி
100 புக்கில் - வினைத்தொகை
101 யாவரும் – முற்றும்மை
102 பலகாவதம் - நெடுந் தொலைவு

103 காண்குவை - முன்னிலை ஒருமை வினைமுற்று
106 எரிவிழி - உவமைத்தொகை
108 கள்ளும்ஊனும்--எண்ணும்மை
109 ஓம்புதல் - பாதுகாத்தல்
112 படர்குவை - முன்னிலை ஒருமை வினைமுற்று
113 ஒல்லும்நெறி - பெயரெச்சத் தொடர்
115 ஆருயிர் - பண்புத்தொகை
116 விளிமா - இறந்த விலங்கு வினைத்தொகை
118 செய்தேம் - தன்மைப் பன்மை வினைமுற்று
120 பண்டும்பண்டும் – அடுக்குத் தொடர்
121 உறுபொருள் - மிக்கபொருள்
122 மென்றுகில் - பண்புத் தொகை
123 எடுத்தனன் - முற்றெச்சம்
127 தானம் – அறம்
129 பூங்கொடி – வேற்றுமைத் தொகை
131 புனையா ஓவியம்-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத் தொடர்
132 துயரறு கிளவி – இனிய சொல்
133 சுரை - உள்ளிடம்
134 பாரகம் - இடவாகு பெயர்
135 ஆருயிர் மருந்து - சோறு

# கம்பர் இராமாயணம்

1 உயர்வு நவிற்சியணி
அயிர்க்கும் – ஐயப்படுகின்ற
நன்னகர் – பண்புத்தொகை

2 அரியணை - மன்னனின் இருக்கை
பொலிந்து – வினையெச்சம்
சாரணர் - பதினெட்டுத் தேவ கணங்களில் ஒரு பிரிவினர்
திரியுஞ் சாரணர் - பெயரெச்சத் தொடர்

3 மடங்கல் – சிங்கம்
மொய்ம்பு – வலிமை
படைப்பன் – தன்மை யொருமை வினைமுற்று
நான்முகன் - பிரமதேவன்
தேவரோடு – ஓடு மூன்றும் வேற்றுமை உருபு

4 அந்தரம் – வெண்வெளி
இரவி - கதிரவன்
அடிபணிந்தான் - வேற்றுமைத்தொகை

5 குயிற்றி - பதித்து
அருத்தியொடு - அன்பொடு
சொல்லும்–செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று

6 எளிவந்த – எளிதில் எழுந்தருளிய
செய்தவம் - வினைத் தொகை
அன்று - எதிர்மறை குறிப்பு வினைமுற்று

7 ஒப்புமைக் கூட்டவணி
இகல் - பகை
பனிவரை - கைலாயமலை

பதுமம் - தாமரை
பதுமபீடத்தின் - காரணப் பெயர்
புகலுண்டோ - ஓகாரம் எதிர்மறை

8 தளிக்கும் - செழிக்கும்
சம்பரன் - ஓர் அசுரன்
புரந்தரன் - இந்திரன்
நிற்ப - செய என்னும் வாய்பாட்டு வினைஎச்சம்
குன்றளிக்கும் - அளிக்கும் உவம உருபு

9 உவகைக்கடல் - உருவகம்
கடைத்தலை - தலைக்கடை இலக்கணப் போலி
முன்மொழியப் பின்மொழியும் - முரண்தொடை

10 நிருதர் - இராக்கதர்
தந்தீதி-ஏவல் வினைமுற்றுத் திரிசொல்
தகைவேள்வி – சிறப்புடைய யாகம்
காமவெகுளி - உவமைத் தொகை

11 மருமம் - மர்மம் (உயிர்நிலை)
அருந்தவம் - பண்புத்தொகை
கனல் - நெருப்பு

12 நறுந்தார் - மணங்கமழும் மாலை
ஊற்றம் - தேர்ச்சி
காப்பென் - தன்மை ஒருமை வினைமுற்று

13 இமையோர் - தேவர்கள்
சிவந்தன கண் -வினைமுற்றுத் தொடர்

14 கறுத்த - சினந்த
மாமுனி – உரிச்சொற்றொடர்
உன்னி - நினைத்து
பொறுத்தி - வியங்கோள் வினைமுற்று
புகன்று - சொல்லி

15 வேலை – கடல்
வேலைவாய் - ஏழாம் வேற்றுமையுருபு
விஞ்சை - வித்தை

16 கேள்வன் - கணவன்
கொணர்மின் - ஏவல்பன்மை வினைமுற்று
உம்பரான் - மேலானவன்
வருக - வியங்கோள் வினைமுற்று

17 எந்தை - மரூஉமொழி
நான்மறை - நான்கு வேதங்கள்
இயைந்த - வினையாலணையும் பெயர்

18 நவை - காம, வெகுளி மயக்கங்கள்
நவைக்கண் – நீக்கப் பொருளில் ஏழனுருபு வந்தது, உருபு மயக்கம்
எடுத்த சீற்றம் - பெயரெச்சத் தொடர்

19 விசித்து - வினையெச்சம்
விசித்து - கட்டி
தூணி - அம்புகள் வைக்கும் பை
தேய்வுரு - ஈறு கெட்ட எதிர் மறைப் பெயரெச்சத்தொடர்

20 சாயை - நிழல்
மாதவற்றொடர்ந்த - வேற்றுமைத் தொகை
புரிசை - மதில்
அன்ன தம்பி – அன்னகுறிப்பு வினைப் பெயரெச்சம்

21 மாசு - குற்றம்
சிலம்பினன்ன - அன்ன உவமஉருபு

வார்புனல் - வினைத்தொகை
புனல் - நீர்
22 கால் - காற்று
அரும்பு கொங்கையர் - உவமைத்தொகை
மெல்லோதி-பண்புத்தொகை
ஓதி - கூந்தல்
23 உவமையணி
மாமழை - உரிச்சொற்றொடர்
சூழியானை - வேற்றுமைத் தொகை
முகடு - சிகரம்
24 தேவு - தெய்வத்தன்மை
மாதவற்றெழுது - வேற்றுமைத்தொகை
ஆவுதி - ஆகுதி
வேள்விவாய் - ஏழாம் வேற்றுமை உருபு

# முத்தொள்ளாயிரம்

1 அள்ளல் - சேறு
பழனம் - நீர்நிலை
வெரீஇ - சொல்லிசையளபெடை
அரக்காம்பல் - செவ்வாம்பற்பூ
புள்இனம் பறவைக்கூட்டம்
அரோ - அசை
பார்ப்பு - பறவையின் இளங் குஞ்சுகள்
2 காணிய-பார்க்கும் பொருட்டு செய்யிய என்னும் வாய்பாட்டு வினைஎச்சம்
செல்வர் - குறிப்பு வினையாலணையும் பெயர்
பைம்பூண் -பசும் பொன்னால் செய்த அணிகலன்
3 மருப்பு - கொம்பு
ஊசி - எழுத்தாணி
எழுதும் - செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று
உரு - அச்சம்
இலைவேல் - உவமைத் தொகை
4 கூடலிழைத்தல் - மணலில் வட்டமாகக் கோடு பிரித்து அதனுள் சுற்று வட்டமாகச் சுழி சுழியாகக் சுழித்து விளையாடுதல்
பிழைபாக்கு - தொழிற்பெயர்
பாக்கு - விகுதி
5 இரியல் மகளிர்-போர்க்களத்தில் ஊரிலிருந்து விலகிச் சென்ற பெண்கள்
செங்காற் குழவி-வண்ணச் சினைச் சொல்
இலைஞெமல்-இலைச்சருகு
ஊமன்-கூகை
பாராட்டாதார்-வினையாலணையும் பெயர்
6 களிகூர்ந்தார்-இரண்டாம் வேற்றுமைத்தொகை
நாவலர்-புலவர்
மாண்ட-சிறந்த;பெயரெச்சம்
சிலம்பி-சிலந்தி

# கலிங்கத்துப்பரணி

## காடு பாடியது

1 உளப்பு–வருத்தம்
நிணக்கூழ்-இருபெய
ரொட்டுப் பண்புத்தொகை
நிறைவித்தாள்–வினையா
லணையும்பெயர்

காரை-ஒருவகைச்செடி
ஓமை–ஒருவகை மரம்

3 வெள்ளில்–விளாமரம்
வேல்–வேலமரம்
உணங்குநெல்லி-வினைத்
தொகை

4 தேறு-தேற்று மரம்
ஈகை - ஒருவகைக் கொடி
விண்டு-மூங்கில்

5 தீய - குறிப்புப் பெயரெச்சம்
சாயை - சாயாதேவி
(கதிரவன் மனைவி)

7 ஆதவம் – வெப்பம்
பாதவம் - மரம்
நின்ற நிழல் - பெயரெச்சத்
தொடர்

8 செந்நெருப்பு - பண்புத்
தொகை
செந்நெருப்பினை - உருபு
மயக்கம்

9 பெறினும் - உம்மை
எதிர்மறை
நீரென - நீரென்று; செய்யா
என்னும் வாய்பாட்டு
வினையெச்சம்

10 எளிய தானமோ - ஓகாரம்
எதிர்மறை

11 இருபொழுதும் - உம்மை
முற்றும்மை
ஒருபொழுதும் – இழிவு
சிறப்பும்மை

12 கருமுகில் – வெண்மதி
முரண்தொடை
கடக்க - வினையெச்சம்

13 முகடு - வானம்
முகிற்றிரை – உருவகம்
அமுதவட்டம் – உருவகம்

14 ஓடாமே – எதிர்மறை
வினைஎச்சம்
புலம்பொடு – தனிமையொடு

15 உவமையணி
முதுபாம்பு – பண்புத்தொகை
பொதும்பு – பொந்து

16 சூறைவளி – சூறைக்காற்று

17 சுடு சுடலை – வினைத்தொகை
பொடி மூடு தணல் –
நீறுபூத்த நெருப்பு

18 வாய்வழி - வழி ஏழனுருபு

19 கழை - மூங்கில்
புழுங்கியழன்று – ஒரு
பொருட் பன்மொழி
போலும்போலும் - அடுக்குத்
தொடர்
செவிக்காற்று – வேற்றுமைத்
தொகை

21 முள்ளாறு - முட்களையுடைய
வழி
வெள்ளாறும் கோட்டாறும் -
எண்ணும்மை

22 அலைகடல் - வினைத்தொகை

## மதுரைக்கலம்பகம்

1 மழு–ஒருவகை ஆயுதம்
வளை–தொழிலாகு பெயர்
செட்டு-வாணிகம்
பெய்வளை-வினைத்தொகை
பொலம்–அழகு
வரிவளை–வேற்றுமைத் தொகை

2 அசைஇ-சொல்லிசை அளபெடை
பாண்டரங்கக் கூத்து-இறைவன் ஆடிய பதினொரு வகைக் கூத்துள் ஒன்ருகும். திரிபுரத்தை எரித்து சிவ பெருமான் வெண்ணீறு அணிந்து ஆடியது.
நீபவனம்-கடம்பவனம் (மதுரை)
மலர்த்தாள்–உவமைத் தொகை

3 இருப்பவர்-வினையாலணையும் பெயர்
ஒண்ணுது–ஒன்ருது என்பதன் மரூஉ
கனி - தொகுத்தல் விகாரம்
பிறைக் கூற்றம் – உருவகம்

4 இதழி – கொன்றை
மந்தாநிலம்-தென்றல் காற்று

5 அளி-வண்டு
பொதுளிய–நெருங்கிய
நீலவனம்–உருவகம்
அடுதிறன்-வினைத்தொகை
துணங்கை-ஒரு வகைக் கூத்து
மருங்குற்கு–உருபுமயக்கம்
மடங்கல்–நரசிங்கம்
புகலியர் குரிசில்–திருஞான சம்பந்தர்
கறுவி–கோபித்து
கிழவி–வந்தி (பிட்டு விற்றவள்)
கருந்துணி வெண்பிட்டு-முரண்தொகை
பசுந்தமிழ்-பண்புத்தொகை
மலைமகள்-வேற்றுமைத் தொகை
இளமதலை–முருகன்
குமரி-தடாதகைப்பிராட்டி

## நால்வர் நான்மணிமாலை

1 மணிநீர்-வேற்றுமை தொகை
இயல்-இலக்கணம்
ஞானப்பால்-உருவகம்
மறித்து–தடுத்து
தண் கமலம்–பண்புத் தொகை

2 தொடை–மாலை
சொல்வேந்தர் - நாவுக்கரசர்
ஆட்டிற்கு–ஆடுதற்கு
ஞான அமுது-உருவகம்
குடர் நோய்-சூலை நோய்
குடர்–கடைப்போலி
இலாத-இல்லாத; தொகுத்தல் விகாரம்

3 படியிலா–உவமையில்லா
நனிவிருப்பன்-உரிச் சொற்ருெடர்

வான்-இடவாகுபெயர்
உழன்றமை-வருந்தியமை
4 விளங்கிழை வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை

ஆரணம்-வேதம்
மலர்வாய்-உவமைத்தொகை
வாசகத்தேன்-உருவகம்
மன்பதை-மக்கள்
கருங்கல்மனம்-உவமைத் தொகை

## திருக்குற்ருலக் குறவஞ்சி

1 மாமி-பாண்டியன் மனைவியாகிய காஞ்சனமாலை
சிலை-மலை
அலையிலே மலைமிதக்க ஏறினன்-திருநாவுக்கரசர்
அத்தியிலே பூவை அழைப்பித்தான்- திருஞான சம்பந்தர்

அத்தி-எலும்பு
பூவை-பெண்
ஆற்றில்போட்டுக் குளத்தில் எடுத்தான்-சுந்தரர்
ஆறு-மணிமுத்தாறு
2 நித்தர்-அழிவில்லாதவர்
முத்தர்-சிவபிரான்
தமிழுரைத்தமுனி-அகத்தியர்

ஆத்துமம்-உயிர்
இறக்குநாள்-பெயரெச்சத் தொடர்
சிலேட்டுமம்-கோழை
ஏரு-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

வாதவூரான்-மணிவாசகர்

3 அடியிணைமலர்-உருவகம்
மைக்கண் மைதீட்டப் பெற்றகண்
கண்நீலம்-உருவகம்
ஞானக்கொடி-கலைமகள்
4 வேதச்செல்வர்-அந்தணர்
பஞ்சமாபாதகம்-கொலை, களவு, கள், காமம், குருத்துரோகம்
நிலவணிவார்-சிவபிரான்
இரண்டாம் வேற்றுமைத் தொகை
நினைத்தவரம்-பெயரெச்சத் தொடர்
பெறுவர்-வினைமுற்று

5 தார்-மாலை
தள்ளுவாரோ - ஓகாரம் எதிர்மறை
தமிழ்மாலை - குற்ருலக் குறவஞ்சி
சொல் - கருவியாகுபெயர்

## முக்கூடற் பள்ளு

1 மிடைந்த-நெருங்கிய
பூகம்-கமுகு
சூதம்-மாமரம்
ஒன்றி-வினையெச்சம்
தூங்கும் – தொங்கும்

தூங்கும்பலா - பெயரெச்சத் தொடர்

உளுக்க - வளைய
2 பங்கயம் - தாமரை
பார்சடை - பருத்தசடை

மஞ்சட்கழுத்தை - வேற்று
மைத் தொகை

காய்கதிர் - வினைத்தொகை
செந்நெல், செங்கரும்பு
பண்புத்தொகை
பொருநை-தாமிரபரணி
பரவை, குரவை, வாளை
தேனி,மயிந்தி, உழுவை

அயிந்தி, கூளி, மணலி,
ஆரால்
ஓரா, அயிரை, கெண்டை,
கெளிறு, வரால்-மீனின்
வகைகள்
பாய - செயஎன்னும்
வாய்பாட்டு வினையெச்சம்
சிறியவர் - அகத்தியர்
சித்திரம் - அழகு

# வள்ளல் அண்ணாமலை

1 நலம்புரியா - ஈறுகெட்ட
எதிர்மறைப்பெயரெச்சம்
எல்லாப்பொருளும் -
முற்றும்மை

2 கழிகாமம் - உரிச்
சொற்றொடர்
கொடைமடம்-அளவறி
யாது கொடுத்தல்

3 கயற்கண்ணி - கயல்போலும்
கண்ணையுடையமாது
உவமைத்தொகை

4 மகம்-வேள்வி
தாளாற்றி-வேற்றுமைத்
தொகை
முகன்-கடைப்போலி
அமர் செல்வன் - வினைத்
தொகை
அடங்கா – எதிர்மறை
வினைமுற்று

5 எழிலி–மேகம்

6 வேறுபடுநிலை-வினைத்
தொகை
ஓர்ந்து–நினைந்து

7 வெள்கிடும் - வெட்கமடையும்

8 வண்டின்-இன் ஐந்தாம்
வேற்றுமை உருபுஉவமைப்
பொளில் வந்தது

9 வாழ்க - வியங்கோள் வினை
முற்று
அருந்திறல் - பண்புத்
தொகை

10 மடமை, வறுமை, உம்மைத்
தொகை

11 தழைப்ப–செயஎன்னும்
வாய்பாட்டு வினையெச்சம்

12 மண்படைத்தார்-
வேற்றுமைத்தொகை

13 கலைப்பால்-கல்வியாகியபால்
உருவகம்

14 விரும்பும்ஐம்புலன் - வினைத்
தொகை
தோலா - தோற்காத; ஈறு
கெட்ட எதிர்மறைப்
பெயரெச்சம்

15 போற்றுதும்-தன்மைப்
பன்மை வினைமுற்று

16 வாழியர் - வியங்கோள்
வினைமுற்று

# 11. குறுந்தொகை

இந்நூல் சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகையுள் இரண்டாவதாக உள்ளது. குறுகிய அடிகளையுடைய பாடல்களைக் கொண்டுள்ளமையால் குறுந்தொகை எனப் பெயர் பெற்றது. இப்பாடல்கள் நான்கடிச் சிற்றெல்லை யும் எட்டடிப் பேரெல்லையும் உடையன. இந்நூலுள் அகப்பொருள் பற்றிய 401 பாடல்கள் உள்ளன. இந் நூலின் முதற்கண் அமைந்துள்ள கடவுள் வாழ்த்து பாரதம் பாடிய பெருந்தேவனாரால் இயற்றப் பெற்றது. மற்ற பாடல்கள் 205 புலவர்களால் பாடப்பெற்றுள்ளன. இதனைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆவர். தொகுப்பித் தவர் யாரெனத் தெரியவில்லை. பாடல்களுக்குத் திணை குறிக்கப் பெறவில்லை. பத்துச் செய்யுள்களுக்குப் பாடிய புலவர்களின் இயற்பெயர் கிடைக்கவில்லை. அதனால் அவர்கள் அமைத்துள்ள சிறப்புச் சொற்றொடரால் பெயர் குறிக்கப்பெற்றுள்ளனர்.

குறுந்தொகைப் பாடல்கள் சிறியனவாக இருத்தலின் முதற்பொருள், கருப்பொருள் என்பனவற்றின் விளக் கங்கள் அதிகமாக இடம்பெறவில்லை. உரிப்பொரு ளாகிய ஒழுக்கம் நெஞ்சங் கவரும் வண்ணம் உணர்ச்சியும் சுவையும் ததும்பக் கூறப்பட்டுள்ளது. இப்பாடல்களில் காணப்பெறும் உவமைகளும், உள்ளுறைகளும் ஆழ்ந்து சிந்தித்தற்குரியன,

நம் பாடப்பகுதியில் அறத்தொடு நிற்றல், மடலேற்றம், தலைவி ஆற்றியிருத்தல், வரைவு கடாதல் முதலிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

## குறுந்தொகை

துறை:- தலைமகள், தன்னெஞ்சிற்குச் சொல்வாளாய்த் தோழி கேட்பச் சொல்லியது

1 கோடீ ரிலங்குவளை ஞெகிழ நாடொறும்
பாடில கலிழுங் கண்ணொடு புலம்பி
ஈங்கிவ ணுறைதலும் உய்குவ மாங்கே
எழுவினி வாழியென் னெஞ்சே முனாஅது
குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேறு கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்
வழிபடல் சூழ்ந்திசி னவருடை நாட்டே

— மாமூலனார்

துறை:- ஆற்ருள் எனக்கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது

2 எறும்பி யளைபிற் குறும்பல் சுனைய
உலைக்கல் லன்ன பாறை யேறிக்
கொடுவில் லெயினர் பகழி மாய்க்கு
கவலைத் தென்பவவர் சென்ற ஆறே
அதுமற் றவலங் கொள்ளாது
நொதுமற் கழறுமிவ் வழுங்கலூரே

— ஓதலாந்தையார்

துறை:- தலைவன் தோழியிற் கூட்டம் கூடி,
ஆற்றுவித்துப் பிரிய வேறுபட்ட கிழத்தி
தோழிக்குரைத்தது

3 மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெய ருழந்த இரும்பிணர்த் துறுகற்
பைத லொருதலைச் சேக்கு நாடன்
நோய்தந் தனனே தோழி
பசலை யார்ந்தன குவளையங் கண்ணே

— கபிலர்

துறை:- தோழி குறைமறுத்துழித் தலைமகன்
மடலேறுவன் என்பதுபடச் சொல்லியது

4 அமிழ்துபொதி செந்நா வஞ்ச வந்த
வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவையைப்
பெறுகதில் லம்ம யானே பெற்றாங்
கறிகதில் லம்மவிவ் வூரே மறுகில்
நல்லோள் கணவ னிவனெனப்
பல்லோர் கூறயாம் நாணுகஞ் சிறிதே

— தொல்கபிலர்

துறை:- உடன்போயினபின் செவிலி நற்றாய்க்கு
அறத்தொடு நின்றது

5 பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழற்
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தையொடு நட்பே

— ஔவையார்

துறை:- பொருள்வயிற் பிரிந்தவிடத்துத் தலைமகன் ஆற்ருமை கண்டு தோழி கூறியது

6 உள்ளார் கொல்லோ தோழி களவர்தம்
பொன்புனை பகழி செப்பங் கொள்மார்
உகிர்நுதி புரட்டு மோசைபோலச்
செங்காற் பல்லி தன்றுணை பயிரும்
அங்காற் கள்ளியங் காடிறந் தோரே

— பாலைபாடியபெருங்கடுங்கோ

துறை:- தோழியர் கூட்டம் வேண்டிப் பின்னின்ற தலைமகன் தோழி குறை மருமற் கூறியது

7 மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியும் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ் கொளினே

— பேரெயின் முறுவலார்

துறை:- இரவுக்குறி வந்து நீங்குந் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு வரைவு கடாவியது

8 வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரல்
கிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவ
ளுயிர்தவச் சிறிது காமமோ பெரிதே

— கபிலர்

துறை:- உணர்ப்புவயின்வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது

9 எவ்வி யிழந்த வறுமையாழ்ப் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தெல்லுறு மௌவல் நாறும்
பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே

— பரணர்

துறை:- செலவுணர்த்திய தோழிக்குக் கிழத்தியுரைத்தது

10 அருளு மன்பும் நீக்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோ ருரவோ ராயின்
உரவோ ருரவோ ராக
மடவ மாக மடந்தை நாமே

-- கோப்பெருஞ்சோழன்

துறை:- பருவவரவின்கண் கவன்ற தோழிக்குத் தான் ஆற்றுவல் என்பதுபடத் தலைவி சொல்லியது

11 வண்டுபடத் ததைந்த கொடியின ரிடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் ரேன்றும் புதுப்பூங் கொன்றை
கானங் காரெனக் கூறினும்
யானோ தேறேனவர் பொய்வழங் கலரே

— ஓதலாந்தையார்

துறை:- செலவுக் குறிப்பறிந்து ஆற்ருளாகிய கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது

12 நீர்வார் கண்ணை நீயிவ ணொழிய
யாரோ பிரிகிற் பவரே சாரற்

சிலம்பணி கொண்ட வலஞ்சுரி மராஅத்து
வேனி லஞ்சினை கமழுந்
தேமழ ரொண்ணுதல் நின்னொடுஞ் செலவே

— சேரமானெந்தை

துறை:- கட்டுக்காணிய நின்ற விடத்துத் தோழி அறத்தொடு நின்றது

13 அகவன் மகளே யகவன் மகளே
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே யவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே

— ஔவையார்

துறை:- பருவங்கண்டு ஆற்ருளாகிய கிழத்தி யுரைத்தது

14 கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்
என்னை யின்றியுங் கழிவது கொல்லோ
ஆற்றய லெழுந்த வெண்கோட் டதவத்
தெழுகுளிர் மிதித்த வொருபழம் போலக்
குழையக் கொடியோர் நாவே
காதல ரகலக் கல்லென் றவ்வே

— பரணர்

துறை:- வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது

15 யாருமில்லைத் தானே களவன்
தானது பொய்ப்பின் யானெவ— செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீ ராரல் பார்க்கும்
குருகு முண்டுதான் மணந்த ஞான்றே

— கபிலர்

# 12. புறநானூறு

புறநானூறு சங்க இலக்கிய எட்டுத்தொகையுள் எட்டாவதாக அமைந்துள்ளது. புறப்பொருளைப் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டுள்ளதால் புறநானூறு எனப் பெயர் பெற்றது. புறப்பொருளாவது அறமும் பொருளுமாகும். இந்நூலினைத் தொகுத்தவர் தொகுப்பித்தவர் யாவரென்பது தெரியவில்லை. இது புறம் எனவும் புறப்பாட்டெனவும் பெயர்பெறும். இந்நூலினைப் பாடியவர்கள் காலம், குலம், இனம், இடம், தொழில் முதலியவற்றால் வேறுபட்டவர். இவர்களில் சிலர் அரசர்களாவர்.

இந்நூல் தமிழ்நாட்டு வரலாறு, அரசியல், பொருளாதார, சமூக நலங்களை அறிதற்கும், அவ்வக்காலத்து நிகழ்ந்த போர்கள், கலைப்பண்புகள் முதலியவற்றைத் தெரிந்துகொள்வதற்கும் மிக்க துணையாகவுள்ளது. இந்நூல் செய்யுட்கள் உரையாசிரியர்களாலும் நூல் செய்வோராலும் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன.

## புறநானூறு

திணை: பாடாண்டிணை, துறை – இயன்மொழி
கோப்பெருஞ் சோழனைப் பிசிராந்தையார் பாடியது

1 நுங்கோ யாரென வினவி னெங்கோக்
களமர்க் கரித்த விளையல் வெங்கள்
யாமைப் புழுக்கிற் காமம் வீடவாரா

ஆரற் கொழுஞ்சூ டங்கவு ளடாஅ
வைகுதொழின் மடியு மடியா விழவின்
யாணர் நன்னாட் டுள்ளும் பாணர்
பைதற் சுற்றத்துப் பசிப்பகை யாகிக்
கோழி யோனே கோப்பெருஞ் சோழன்
பொத்தி னண்பிற் பொத்தியொடு கெழீஇ
வாயார் பெருநகை வைகலு நக்கே

திணை — வஞ்சி, துறை — துணைவஞ்சி

கோப்பெருஞ் சோழனைக் புல்லாற்றூர் எயிற்றியனார் பாடியது

2 மண்டம ரட்ட மதனுடை நோன்றாள்
வெண்குடை விளக்கும் விறல்கெழு வேந்தே
பொங்குநீ ருடுத்தவிம் மலர்தலை யுலகத்து
நின்றலை வந்த விருவரை நினைப்பிற்
றொன்றுறை துப்பினின் பகைஞரு மல்லர்
அமர்வெங் காட்சியொடு மாறெதிர் பெழுந்தவர்
நினையுங் காலை நீயு மற்றவர்க்
கனையை யல்லை யடுமான் றோன்றல்
பரந்துபடு நல்லிசை யெய்தி மற்றுநீ
உயர்ந்தோ ருலக மெய்திப் பின்னும்
ஒழித்த தாய மவர்க்குரித் தன்றே
அதனால், அன்ன தாதலு மறிவோய் நன்றும்
இன்னுங் கேண்மதி யிசைவெய் யோயே
நின்ற துப்பொடு நிற்குறித் தெழுந்த
எண்ணில் காட்சி யிளையோர் தோற்பின்
நின்பெருஞ் செல்வம் யார்க்கெஞ் சுவையே
அமர்வெஞ் செல்வ நீ யவர்க் குலையின்

இகழுந ருவப்பப் பழியெஞ் சுவையே
அதனுல், ஒழிகதி லத்தைநின் மறனே வல்விரைந்
தெழுமதிவாழ்க நின் னுள்ள மழிந்தோர்க்
கேம மாகுநின் ருணிழன் மயங்காது
செய்தல் வேண்டுமா னன்றே வானேர்
அரும்பெற லுலகத் தான்றவர்
விதும்புறு விருப்பொடு விருந்தெதிர் கொளற்கே

திணை-பொதுவியல், துறை: பொருண்மொழிக்காஞ்சி வடக்கிருந்த கோப்பெருஞ்சோழன் சொல்லியது

3. செய்குவங் கொல்லோ நல்வினை யெனவே
ஐய மருஅர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே
யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனுல், உயர்ந்த வேட்டத் துயர்ந்திசி னேர்க்குச்
செய்வினை மருங்கி னெய்த லுண்டெனிற்
ருெய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கூடும்
தொய்யா வுலகத்து நுகர்ச்சி யில்லெனின்
மாறிப் பிறப்பி னின்மையுங் கூடும்
மாறிப் பிறவா ராயினு மிமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தறவத் தலையே

திணை—பாடாண்டிணை, துறை-இயன்மொழி

கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் வருவார் என்று சொல்லியது.

4 கவைக்கதிர் வரகி னவைப்புறு வாக்கல்
தாதெரு மறுகிற் போதொடு பொதுளிய

வேளை வெண்பூ வெண்டயிர்க் கொளீஇ
ஆய்மக ளட்ட வம்புளி மிதவை
அவரை கொய்யுந ரார மாந்தும்
தென்னம் பொருப்ப னன்னாட் டுள்ளும்
பிசிரோ னென்பவென் னுயிரோம் புதனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன் மன்னே

திணை—பாடாண்டிணை, துறை—இயன்மொழி

அவன், பிசிராந்தையார்க்கு இடன் ஒழிக்கக் கூறியது

5 கேட்டன் மாத்திரை யல்ல தியாவதும்
காண்ட லில்லா தியாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமைய ராகினும்
அரிதே தோன்ற லதற்பட வொழுகலென்
றையங் கொள்ளன்மி னாரறி வாளீர்
இகழ்வில னினிய னியாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே
தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்
பேதைச் சோழ னென்னுஞ் சிறந்த
காதற் கிழமையு முடைய னதன்றலை
இன்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவ னொழிக்கவவற் கிடமே

திணை—பொதுவியல், துறை-கையறுநிலை

பிசிராந்தையாரைக் கண்டு பொத்தியார் பாடியது

6 நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே
எனைப்பெருஞ் சிறப்பினோ டீங்கிது துணிதல்
அதனினு மருட்கை யுடைத்தே பிறனாட்டுத்

தோற்றஞ் சான்ற சான்றோன் போற்றி
இசைமர பாக நட்புக் கந்தாக
இனையதோர் காலை யீங்கு வருதல்
வருவ னென்ற கோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவ னறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே
அதனால், தன்தோ லியங்காத் தேயத் துறையும்
சான்றோ னெஞ்சுறப் பெற்ற தொன்றிசை
அன்னோனை யிழந்தவிவ் வுலகம்
என்னா வதுகொ லளியது தானே

திணை-பொதுவியல், துறை—கையறுநிலை

வடக்கிருந்த பிசிராந்தையாரைக் கண்ட கண்ணகனார் பாடியது

7 பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்
தருவிலை நன்கல மமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பாலரா குபவே

திணை—பொதுவியல், துறை-கையறுநிலை

வடக்கிருந்த கோப்பெருஞ்சோழனைப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் பாடியது

8 உள்ளாற்றுக் கவலைப் புள்ளி நீழல்
முழுஉ வள்ளூற முணக்கு மள்ள
புலவதி மாதோ நீயே
பலரா லத்தைநின் குறியிருந் தோரே

திணை-பொதுவியல், துறை-கையறுநிலை

உறையூர் கண்ட பொத்தியார் பாடியது

9 பெருஞ்சோறு பயந்து பல்யாண்டு புரந்த
பெருங்களி றிழந்த பைதற் பாகன்
அதுசேர்ந் தல்கிய வழுங்க லாலை
வெளில்பா ழாகக் கண்டுகலுழ்ந் தாங்குக்
கலங்கினே னல்லனோ யானே பொலந்தார்த்
தேர்வண் கிள்ளி போகிய
பேரிசை மூதூர் மன்றங் கண்டே

திணை-பொதுவியல், துறை-கையறுநிலை

கோப்பெருஞ்சோழன் நடுகற்கண்டு பொத்தியார் பாடியது

10 பாடுநர்க் கீத்த பல்புக ழன்னே
ஆடுநர்க் கீத்த பேரன் பின்னே
அறவோர் புகழ்ந்த வாய்கோ லன்னே
திறவோர் புகழ்ந்த திண்ணன் பினனே
மகளிர் சாயன் மைந்தர்க்கு மைந்து
துகளறு கேள்வி யுயர்ந்தோர் புக்கில்
அனைய னென்னு தத்தக் கோனை
நினையாக் கூற்ற மின்னுயு ருய்த்தன்று
பைத லொக்கற் றழீஇ யதனை
வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்
நனந்தலை யுலக மரந்தை தூங்கக்
கெடுவி னல்லிசை சூடி
நடுக லாயினன் புரவல னெனவே

திணை—பொதுவியல், துறை—கையறுநிலை

இடம் வேண்டிப் பொத்தியார் பாடியது

11 அழலவிர் வயங்கிழைப் பொலிந்த மேனி
நிழலினும் போகாநின் வெய்யோன் பயந்த
புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வாவென
என்னிவ ணொழித்த வன்பி லாளா
எண்ணா திருக்குவை யல்லை
என்னிடம் யாதுமற் றிசைவெய் யோயே

திணை-பொதுவியல், துறை—கையறுநிலை

இடம் பெற்ற பொத்தியார் பாடியது

12 பலர்க்கு நிழலாகி யுலகமீக் கூறித்
தலைப்போ கன்மையிற் சிறுவழி மடங்கி
நிலைபெறு நடுக லாகியக் கண்ணும்
இடங்கொடுத் தளிப்ப மன்ற வுடம்போ
டின்னுயிர் விரும்புங் கிழமைத்
தொன்னட் புடையார் தம்முழைச் செலினே

# 13. பெரியபுராணம்

பெரியபுராணம் சைவத்திருமுறைகளில் பன்னிரண்டாவதாக வைக்கப்பட்டுள்ளமையால் பன்னிரண்டாம் திருமுறை என்று பெயர் பெறும். சேக்கிழார் இந்நூலுக்கு இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்'. என்பதாகும். பெரியபுராணம் என்பது குறிப்புப்பெயரெச்சத் தொடர். பெரியாரைப் பற்றிய புராணம் என்று பொருளைத் தருவதால் இரண்டாம் வேற்றுமை உருபும்

பயனும் உடன் தொக்க தொகையாகும். புராணம் என்பது பழைய வரலாறு என்று பொருள்படும். திருத் தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, வர லாற்றுக் குறிப்புகள், கல்வெட்டுச் சான்றுகள், செவி வழிச் செய்திகள், தேவாரத் திருமுறைகள் முதலிய வற்றைத் துணையாகக் கொண்டு சேக்கிழார் இந்நூலை விரிவாகச் செய்துள்ளார்.

இந்நூலின் பாட்டுடைத்தலைவர் தில்லை கூத்தப் பிரான், அவர் 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுக்க அச்சொற்றொடரை இந்நூலின் முதலிலும், நடுவிலும். இறுதியிலும் வைத்துப் பக்திச்சுவை நனி சொட்டச்சொட்ட மற்றச் சுவைகளையும் துணையாக அமைத்துச் சேக்கிழார் இந்நூலை இயற்றியுள்ளார். நடையழகு இலக்கிய நயங்கள், அணிகள், சந்தங்கள் சமயமரபுகள் ஆகியன இந்நூலில் செறிந்துள்ளமை காணலாம்.

பாடப்பகுதியாகிய 'அப்பூதியடிகள் நாயனார் புராணம்' அடியார்களுக்கு அன்னமளிக்கும் சிறப்பினை விளக்குவது

# பெரிய புராணம்

## அப்பூதியடிகள் நாயனார்

### அப்பூதியடிகள் பண்பு

1 தாண்டவம் புரிய வல்ல தம்பிரா னாருக் கன்பர்
ஈண்டிய புகழின் பாலா ரெல்லையி றவத்தின் மிக்கார்;
ஆண்டசீ ரரசின் பாத மடைந்தவ ரறியா முன்னே
காண்டகு காதல் கூரக் கலந்தவன் பினரா யுள்ளார்

2 களவு பொய் காமங் கோப முதலிய குற்றங் காய்ந்தார்
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினர்; மனைப்பா லுள்ள
அளவைக ணிறைகோன் மக்க ளாவொடு மேதி மற்று
உளவெலா மரசி னுமஞ் சாற்றுமவ் வொழுக்க லாற்றார்;

## தொண்டு

3 வடிவுதாங் காணு ராயு மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையுந் தம்பி ரானு ரருளுங்கேட் டவர்நா மத்தாற்
படிநிகழ் மடங்க டண்ணீர்ப் பந்தர்கண் முதலா யுள்ள
முடிவிலா வறங்கள் செய்து முறைமையால் வாழு நாளில்;

## நாவுக்கரசர் வருகை

4 பொருப்பரையன் மடப்பிடியி னுடன்புணருஞ்
சிவக்களிற்றின்
திருப்பழனம் பணிந்துபணி செய்திருநா வுக்கரசர்
ஒருப்படுகா தலிற்பிறவு முடையவர்தம் பதிவணங்கும்
விருப்பினொடுந் திங்களூர் மருங்குவழி மேவுவார்;

## தண்ணீர் பந்தர் அமைப்பு

5 அளவில்சனஞ் செலவொழியா வழிக்கரையி லருளுடையார்
உளமனைய தண்ணளித்தா யுறுவேனிற் பரிவகற்றிக்
குளநிறைந்த நீர்த்தடம்போற் குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளமருவு நிழறருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார்

## நாவுக்கரசர் அப்பூதியார் இல்லஞ்சேர்தல்

6 வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்
பந்தருட னமுதமுமாந் தண்ணீரும் பார்த்தருளிச்
சிந்தைவியப் புறவருவார் 'திருநாவுக் கர' செனும்பேர்
சந்தமுற வரைந்ததனை யெம்மருங்குந் தாங்கண்டார்

7 'இப்பந்த ரிப்பெயரிட் டிங்களமந்தா ரியா' ரென்றூர்க்
கப்பந்த ரறிந்தார்க ளாண்டவர செனும்பெயராற்
செப்பருஞ்சீ ரப்பூதி யடிகளார் செய்தமைத்தார்;
தப்பின்றி யெங்குமுள சாலேகுளங் காவென்றூர்

8 என்றுரைக்க வரசுகேட் டிதற்கென்னே கருத்தென்று
நின்றவரை நோக்கியவ ரெவ்விடத்தா ரெனவினவத்
துன்றியநூன் மார்பருமித் தொல்பதியார் மனையின்கட்
சென்றனரிப் பொழுததுவுஞ் சேய்த்தன்று நணித்தென்றூர்

9 அங்ககன்று முனிவரும்போ யப்பூதி யடிகளார்
தங்குமனைக் கடைத்தலைமுன் சார்வாக, வுள்ளிருந்த
திங்களூர் மறைத்தலைவர் செழுங்கடையில் வந்தடைந்தார்
நங்கள்பிரான் றமரொருவ ரெனக்கேட்டு நண்ணினூர்

## அப்பூதியார் - நாவுக்கரசர் உரையாடல்

10 கடிதணைந்து வாகீசர் கழல்பணிய மற்றவர்தம்
அடிபணியா முன்பணியு மரசினெதி ரந்தணனூர்
முடிவிறவஞ் செய்தேன்கொன் முன்பொழியுங் கருணைபுரி
வடிவுடையீ ரென்மனையில் வந்தருளிற் றென்னென்றூர்

11 ஒருகுன்ற வில்லாரைத் திருப்பழனத் துள்ளிறைஞ்சி
வருகின்றேம் வழிக்கரையி னீர்வைத்த வாய்ந்தவளந்
தருகின்ற நிழற்றண்ணீர்ப் பந்தருங்கண் டத்தகைமை
புரிகின்ற வறம்பிறவுங் கேட்டணைந்தோ மெனப்புகல்வார்

12 'ஆறணியுஞ் சடைமுடியா ரடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தரினும்பே ரெழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா
ரணமென்கொல்?
கூறு' மென வெதிர்மொழிந்தார் கோதின்மொழிக்
கொற்றவனூர்

13 நின்றமறை யோர்கேளா நிலையழிந்த சிந்தையராய்
'நன்றருளிச் செய்திலீர்!' நாணிலமண் பதகருடன்
ஒன்றியமன் னவன்சூழ்ச்சி திருத்தொண்டி னுறைப்பாலே
வென்றவர்தந் திருப்பேரோ 'வேறொருபேர்?'
எனவெகுள்வார்.

14 'நம்மையுடை யவர்கழற்கீழ் நயந்ததிருத் தொண்டாலே
யிம்மையிலும் பிழைப்பதென வென்போல்வா ருந்தெளியச்
செம்மைபுரி திருநாவுக் கரசர்திருப் பெயரெழுத
வெம்மைமொழி யான்கேட்க விளம்பினீர்' எனவிளம்பி

15 'பொங்குகடற் கன்மிதப்பிற் போந்தேறு மவர்பெருமை
யங்கணர்தம் புவனத்தி லறியாதா ரியாருளரே!
மங்கலமாந் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீர்!
எங்குறைவீர்? நீர்தாமியார்? இயம்புமென' வியம்பினார்

16 திருமறையோ ரதுமொழியத், திருநாவுக் கரசரவர்
பெருமையறிந் துரைசெய்வார் 'பிறதுறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினா லாட்கொள்ள வடைந்துய்ந்த
தெருளுமுணர் வில்லாத சிறுமையேன் யான்' என்றார்

17 அரசறிய வுரைசெய்ய, வப்பூதி யடிகடாங்
கரகமல மிசைகுவியக், கண்ணருவி பாய்ந்திழிய,
வுரைகுழறி, யுடம்பெல்லா முரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தஞ் சரணகம லம்பூண்டார்

18 மற்றவரை யெதிர்வணங்கி வாகீச ரெடுத்தருள
அற்றவர்க ளருநிதியம் பெற்றார்போ லருமறையோர்
முற்றவுளங் களிகூர முன்னின்று கூத்தாடி
உற்றவிருப் புடன்சூழ வோடினார் பாடினார்

19 மூண்டபெரு மகிழ்ச்சியினான் முன்செய்வ தறியாதே
ஈண்டமனை யகத்தெய்தி யில்லவர்க்கும் மக்களுக்கும்

ஆண்டவர செழுந்தருளு மோகையுரைத் தார்வமுறப்
பூண்டபெருஞ் சுற்றமெலாங் கொடுமீளப் புறப்பட்டார்

20 மனைவியா ருடன்மக்கண் மற்றுமுள்ள சுற்றத்தோர்
அனைவரையுங் கொண்டிறைஞ்சி யாராத காதலுடன்
முனைவரையுள் ளெழுந்தருளு வித்தவர்தாண் முன்விளக்கும்
புனைமலர்நீர் தங்கண்மேற் றெளித்துள்ளும் பூரித்தார்

## நாவுக்கரசர் திருவமுது உண்ண இசைதல்

21 ஆசனத்திற் பூசனைக ளமர்வித்து, விருப்பினுடன்
வாசநிறை திருநீற்றுக் காப்பேந்தி, மனந்தழைப்பத்
தேசமுய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்
நேசமுற விண்ணப்பஞ் செயவவரு மதுநேர்ந்தார்

22 செய்தவ ரிசைந்த போது திருமனை யவரை நோக்கி
'யெய்திய பேறு நம்பா லிருந்தவா றென்னே!' யென்று
'மைதிகழ் மிடற்றி னன்ற ருளினால் வந்த தென்றே,
யுய்து'மென் றுகந்து கொண்டு தீருவமு தாக்க லுற்றார்

## மூத்த திருநாவுக்கரசை அரவுதீண்டல்

23 தூயநற் கறிக ளான வறுவகைச் சுவையா லாக்கி
யாயவின் னமுது மாக்கி, யமுதுசெய் தருளத் தங்கள்
சேயவர் தம்மின் மூத்த திருநாவுக் கரசை வாழை
மேயபொற் குருத்துக்கொண்டு வா வென விரைந்து விட்டார்

24 'நல்லதாய் தந்தை யேவ நானிது செயப்பெற் றே'னென்
றெல்லையில் விரைந்து தோட்டத் துன்புக்குப் பெரிய வாழை
மல்லலங் குருத்தை யீரும் பொழுதினில் வாள ராவொன்
றல்லலுற் றழுங்கிச் சோர வங்கையிற் றீண்டிற் றன்றே

25 கையினிற் கவர்ந்து சுற்றிக் கண்ணெரி கரந்து கின்ற
பையரா வுதறி வீழ்த்துப் பதைப்புடன் பாந்தள் பற்றும்
வெய்யவே கத்தால் வீழா முன்னம்வே கத்தா லெய்திக்
கொய்தவிக் குருத்தைச் சென்று கொடுப்பனென் றோடி
வந்தான்

26 பொருந்திய விடவே கத்திற் போதுவான் வேக முந்த
வருந்தியே யணையும் போழ்து, 'மாசுணங் கவர்ந்த
தியார்க்கும்
அருந்தவ ரமுது செய்யத் தாழ்க்கயா னறையே னென்று
திருந்திய கருத்தி னோடு செழுமனை சென்று புக்கான்

27 எரிவிட முறையே யேறித் தலைக்கொண்ட வேழாம்வேகந்
தெரிவுற வெயிறுங் கண்ணு மேனியுங் கருகித் தீந்து
விரியுரை குழறி யாவி விடக்கொண்டு மயங்கி வீழ்வான்
பரிகலக் குருத்தைத் தாயார் பால்வைத்துப் படிமேல்
வீழ்ந்தான்

## நாவுக்கரசர் விடம் நீக்கல்

28 தளர்ந்துவீழ் மகனைக் கண்டு, தாயருந் தந்தை யாரும்
உளம்பதைத் துற்று நோக்கி, யுதிரஞ்சோர் வடிவு மேனி
விளங்கிய குறியுங் கண்டு, விடத்தினால் வீந்தா னென்று
துளங்குத லின்றைத் தொண்ட ரமுதுசெய் வதற்குச்
சூழ்வார்

29 பெறலரும் புதல்வன் றனைப் பாயினுட் பெய்து மூடிப்,
புறமனை முன்றிற் பாங்கோர் புடையினில் மறைத்து
வைத்தே
அறவிது தெரியா வண்ண மமுதுசெய் வீப்போ மென்று
விறலுடைத் தொண்ட ணர்பால் விருப்பொடு விரைந்து
வந்தார்

30 கடிதுவந் தமுது செய்யக் காலந்தாழ்க் கின்ற தென்றே
அடிசிலுங் கறியு மெல்லர் மழகுற வணைய வைத்துப்
படியில்சீர்த் தொண்ட ஞர்முன் பணிந்தெழுந்
தமுதுசெய்தெங்
குடிமுழு துய்யக் கொள்வீ ரென்றவர் கூறக் கேட்டு

31 அருந்தவ ரெழுந்து செய்ய வடியிணை விளக்கி, வேரோர்
திருந்துமா சனத்தி லேறிப். பரிகலந் திருத்து முன்னர்,
இருந்து, வெண் ணீறுசாத்தி, யியல்புடை யிருவ ருக்கும்
பொருந்திய நீறு நல்கிப் புதல்வர்க்கு மளிக்கும் போழ்தில்

32 ஆதிநான் மறைநூல் வாய்மை யப்பூதி யாரை நோக்கிக்
'காதலா லிவர்க்கு மூத்த சேயையுங் காட்டு முன்னே
மேதகு பூதி சாத்த வென்றலும், விளைந்த தன்மை
யாதுமொன் றுரையா 'ரிப்போ திங்கவ னுதவா னென்றார்'

33 அவ்வுரை கேட்டபோதே யங்கண ரருளா லன்பர்
செவ்விய திருவுள் ளத்தோர் தடுமாற்றஞ்சேயர நோக்கி,
யிவ்வுரை பொருதென் னுள்ள, மென்செய்தா னிதற்
கொன் றுண்டால்
மெய்விரித் துரையு மென்ன விளம்புவார் விதிர்ப்புற் றஞ்சி

34 'பெரியவ ரமுது செய்யும் பேறிது பிழைக்க வென்னு
வருவ?'தென் றுரையா ரேனு, மாதவர் வினவ வாய்மை
தெரிவுற வுரைக்க வேண்டுஞ் சீலத்தாற் சிந்தை நொந்து
பரிவொடு வணங்கி, மைந்தற் குற்றது பகர்ந்தா ரன்றே

35 நாவினுக் கரசர் கேளா 'நன்றுநீர் புரிந்த வண்ணம்!
யாவரித் தன்மை செய்தார்? என்றுமுன் னெழுந்து சென்றே
யாவிதீர் சவத்தை நோக்கி யண்ணலா ரருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்று வித்தார்

36 தீவிட நீங்க வுய்ந்த திருமறை யவர்தஞ் சேயும்
மேவிய வுறக்க நீங்க விரைந்தெழு வானைப் போன்று,
சேவுகைத் தவராட் கொண்ட திருநாவுக் கரசர் செய்ய
பூவடி வணங்கக் கண்டு புனிதநீ றளித்தா ரன்றே!

## நாவுக்கரசருக்கு அமுது செய்வித்தல்

37 பிரிவுறு மாவி பெற்ற பிள்ளையைக் காண்பார் தொண்டின்
நெறியினைப் போற்றி வாழ்ந்தார்; நின்றவப் பயந்தார்
தாங்கள்
அறிவரும் பெருமை யன்ப ரமுதுசெய் தருளு தற்குச்
சிறிதிடை யூறு செய்தா னிவ னென்று சிந்தை நொந்தார்

38 ஆங்கவர் வாட்டந் தன்னை யறிந்துசொல் லரசர்கூட
வோங்கிய மனையி லெய்தி யமுதுசெய் தருள வுற்ற
பாங்கினி லிருப்ப, முந்நூல் பயின்மணி மார்பர் தாமுந்
தாங்கிய மகிழ்ச்சி யோடுந் தகுவன சமைத்துச் சார்வார்

39 புகழ்ந்தகோ மயத்தி னீராற் பூமியைப் பொலிய நீவித்
திகழ்ந்தவான் சுதையும் போக்கிச், சிறப்புடைத் தீப
மேற்றி
நிகழ்ந்தவக் கதலி நீண்ட குருத்தினை விரித்து நீரான்
மகிழ்ந்துடன் விளக்கி யீர்வாய் வலம்பெற மரபின்
வைத்தார்

40 திருந்திய வாச நன்னீ ரளித்திடத், திருக்கை நீவும்
பெருந்தவர் மறையோர் தம்மைப் பிள்ளைக ளுடனே
நோக்கி
யரும்புதல் வர்களு நீரு மமுதுசெய் வீரிங் கென்ன
விரும்பிய வுள்ளத் தோடு மேலவ ரேவல் செய்வார்

41 மைந்தரு மறையோர் தாமு மருங்கிருந் தமுது செய்யச்
சிந்தைமிக் கில்ல மாதர் திருவமு தெடுத்து நல்கக்
கொந்தவிழ் கொன்றை வேணிக் கூத்தனு ரடியா ரோடும்
அந்தமி ழாளி யாரங் கமுதுசெய் தருளி னாரே

## அப்பூதியார் தொண்டைப் பாராட்டல்

42 மாதவ மறையோர் செல்வ மனையிடை யமுது செய்து
காதனண் பளித்துப் பன்னாள் கலந்துட னிருந்த பின்னை
மேதகு நாவின் மன்னர் விளங்கிய பழன மூதூர்
நாதர்தம் பாதஞ் சேர்ந்து, நற்றமிழ்ப் பதிகஞ் செய்வார்

43 அப்பூதி யடிக ளார்தம் யடிமையைச் சிறப்பித் தான்ற
மெய்ப்பூதி யணித்தார் தம்மை விரும்பு 'சொன்மாலை' வேய்ந்த
இப்பூதி பெற்ற நல்லோ ரெல்லையி லன்பா லென்றுஞ்
செப்பூதி யங்கைக் கொண்டார் திருநாவுக் கரசர் பாதம்

44 இவ்வகை யரசி ளுமை மேத்தி, 'யெப் பொருளு நாளும்
அவ்வருந் தவர்பொற் ருளே' யெனவுணர்ந் தடைவார், செல்லுஞ்
செவ்விய நெறிய தாகத், திருத்தில்லை மன்று ளாடும்
நவ்வியங் கண்ணுன் பங்கர் நற்கழ னண்ணி ஞரே

45 மான்மறிக் கையர் பொற்ருள் வாகீச ரடைவாற் பெற்ற
மேன்மையப் பூதி யாராம் வேதியர் பாதம் போற்றிக்
கான்மலர்க் கமல வாவிக் கழனிசூழ் சாத்தமங்கை
நான்மறை நீல நக்கர் திருத்தொழி னவில லுற்றேன்

———

# குறிப்புரை

## குறுந்தொகை

1 கோடு – சங்கு
வளை – தொழிலாகுபெயர்
புலம்பி – வினையெச்சம்
சூழ்ந்திசின் - இறந்தகால வினைமுற்று

2 எறும்பி அளை – எறும்புப்புற்று
உலைக்கல் - வேற்றுமைத் தொகை
பகழி – அம்பு
கவலை - வழி
கழறும் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று

3 கழீஇய – சொல்லிசை யளபெடை
துறுகல் – சிறிய கற்பாறை
சேக்கும் – பெயரெச்சம்
பயலை - பிரிவினல் வரும் நிறவேறுபாடு

4 அமிழ்து பொதி செந்நா – உவமைத் தொகை
வார்தல் – ஒழுங்குபடுதல்
வையெயிறு - உரிச்சொற் றொடர்
பெறுகதில்-தில்இடைச்சொல்

5 பணிலம் - சங்கு
இறை – தங்குதல்
கொள்பு - வினையெச்சம்
மூதாலம் - பண்புத்தொகை
கோசர்-மோகூர் பழையனின் அவைக்கள மறவர்

6 கொண்மார் - வினையெச்சம்
உகிர் - நகம்
செங்காற்பல்லி – வண்ணச் சினைச்சொல்
பயிரும் – அழைக்கும்

7 காழ் - வயிரம்
ஊர்ப – பலர்பால் வினைமுற்று

8 ஆடுமதி – மதி முன்னிலை அசை
வேரல் வேலி - வேற்றுமைத் தொகை

9 எவ்வி – மிழலைக் கூற்றத்துத் தலைவர்
வறுந்தலை – பண்புத் தொகை
மௌவல் – முல்லை

10 அருளும் அன்பும் – எண்ணும்மை
மடவம் – வினையாலணையும் பெயர்

11 ததைந்த - மலர்ந்த
இடுபு - வினையெச்சம்
பூங்கொன்றை– வேற்றுமைத் தொகை
யானே – ஓகாரம் பிரிநிலை

12 மராம் – கடம்பு
தேம் – வண்டு
பிரிகிற்பவர் - வினையாலணையும் பெயர்

13 அகவன் மகள் - வேற்றுமைத் தொகை
மனவு – சங்கு மணி
நெடுங்குன்றம் – பண்புத் தொகை

14 அதவம் – அத்திமரம்
எழுகுளிர் – ஏழு நண்டுகள்
கருங்கால் - பண்புத்தொகை

15 செய்கோ - ஓ அசை
ஒழுகுநீர் – வினைத்தொகை
கால – குறிப்புவினைப் பெயரெச்சம்
ஆரல் – ஒருவகை மீன்

## துறை விளக்கம்

1 தலைவனுடைய பிரிவாற்ருமையால் உடல் மெலிந்து வருந்திய தலைவி தன் நெஞ்சிற்குக் கூறுவாள் போல அவ்வருத்த மிகுதியைத் தோழிக்குப் புலப்படுத்தியது.

2 வருந்திய தலைவி இறந்துபடுவாளோ எனக் கவலையுற்ற தோழிக்குத் தலைவி, யான் வருந்துவது பிரிவிற்கன்று வேருென்றினுக்கு என்று கூறியது.

3 தோழியர் கூட்டத்தின் பின்னர்த் தலைவன் பிரிந்தானுக அப்பிரிவாற்ருது வேறுபட்ட தலைவியைக் கண்டு கவன்ற தோழிக்குத் தலைவி தன் ஆற்ருமைக்குக் காரணங் கூறியது.

4 தோழியாற் குறை மறுக்கப்பட்ட தலைவன் இனி யான் மடன் மாவூர்ந்து என்னைத் துன்புறுத்தியவள் இன்னுள் என்பதை ஊரறியச் செய்து பல்லோரும் பழிதூற்றச் செய்வேன் என அத்தோழி கேட்பக் கூறியது.

5 தலைவனேடு தலைவி தமரிற் பிரிந்து சென்ற பின்னர்த் தோழி அச்செய்தியைத் தன் தாயாகிய செவிலிக்கு அறிவுறுத்தச் செவிலி அச்செய்தியை நற்ருய்க்கு நின்மகள் கற்புக் கடம் பூண்டாள் என்று கூறியது.

6 பொருளீட்டும் பொருட்டுப் பிரிந்த தலைமகன் மீண்டு வாராமை கண்டு வருந்திய தலைவியை அவர் இன்னே வருவர் எனக் கூறித் தோழி ஆற்றுவித்தது.

7 தன் குறையை நிறைவேற்ற மறுத்த தோழியைத் தலைவன் நீ மறுப்பாயாயின், யான் வேறு வழியானும் தலைவியைப் பெறுதல் கூடும் என்பதுபடக் கூறியது.

8 மனைப்படப்பையில் இரவுக்குறிக்கண் தலைவியைப் புணர்ந்து செல்லும் தலைமகனைத் தோழி தனியிடத்தே கண்டு தலைவியின்

வருத்த நிலையுணர்த்தி விரைவில் அவளைப் பலரறிய மணம் செய்து கொள்ள வேண்டும் என வற்புறுத்திக் கூறியது.

9 தனது பரத்தமை காரணமாக ஊடியிருக்கும் தலைவியைத் தலைமகன் நெருங்கி யான் தவறிலேன் எனப்பணி மொழி பல கூறி உணர்த்தவும், அவள் ஊடல் தீராது பின்னர்த் தலைவன் தன்னெஞ்சை நோக்கிப் புலந்து கூறியது.

10 பொருள்வயிற் பிரியக்கருதிய தலைவன் தன் கருத்தைத் தோழிக்குக் கூறினுகைத் தோழி தலைவன் பிரியக் கருதியதைத் தலைவிக்குக் கூற அவள் புலந்து கூறியது.

11 தலைவன் யான் இன்னபருவத்தே மீண்டு வருவன் ஆற்றியிரு எனக் கற்பித்தபடியே தலைவி ஆற்றியிருந்தாள். தலைவன் குறித்த பருவம் வந்தது. ஆனால் தலைவன் வரவில்லை. அது காறும் அரிதின் ஆற்றியிருந்த தலைவி, இனி ஆற்ருள் எனத் தோழி கவல்வதைக் குறிப்பால் அறிந்தாள். ''கானம் அவர் கூறிய பருவத்தைக் காட்டிற்ருயினும் இது அப்பருவம் அன்று ஏனெனில் அவர் பொய் கூறுர் அல்லரோ'' எனத் தான் ஆற்றியிருப்பேன் என்பது தோன்றக் கூறியது.

12 தலைவர் தன்னைப்பிரிந்துசெல்வார் கொல் என ஐயுற்று வருந்திய தலைவியை, அவர் உன்னைப் பிரிந்து செல்லும் வன்கண்ணர் அல்லர். உன்னையும் உடனழைத்தே செல்வர் எனக்கூறித் தோழி தேற்றியது.

13 இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர்ப் பிரிந்த தலைவனைப் பின்னர்க் கூடப் பெருமையால், ஆற்ருமைமிக்கு மெலிந்த தலைவியைக் கண்டு இந்நோய்க்காரணம் அறிவான் கட்டு விச்சிபாற் குறிகேட்கத் தலைப்பட்ட செவிலிக்குத் தோழி இந்நோய் தெய்வத்தான் வந்ததன்று; ஒரு தலைவனுல் ஆயிற்று எனக்குறிப்பாற் கூறி அறத்தொடு நின்றது.

14 இன்ன பருவத்தே மீண்டு வருவல்; அதுகாறும் ஆற்றியிரு எனக்கூறிச் சென்ற தலைவன் அப்பருவம் வந்துழியும் வாராமை கண்ட தலைவி ஆற்ருது கூறியது.

15 தலைவன் வரைந்து கொள்ளாது காலம் நீடிக்கச் செய்தல் கண்ட தலைவி வருந்தித் தோழிக்குக் கூறியது.

# புறநானூறு

1 களமர் - உழவர்
புழுக்கு – இறைச்சி
தொழிலாகுபெயர்
கவுள் - கதுப்பு
மடியா – ஈறுகெட்ட
எதிர்மறைப்பெயரெச்சம்
யாணர் – புதுவருவாய்
பைதல் - துன்பம்

2 மதன் - வலிமை
நோன்ருள் - பண்புத்தொகை
பொங்குநீர் – வினைத்தொகை
தாயம் – அரசாட்சியுரிமை
கேண்மதி-மதிமுன்னிலையசை
காட்சி - அறிவு
எஞ்சுவை – முன்னிலை
ஒருமை வினைமுற்று

3 அருஅர் – இன்னிசை
அளபெடை
குறும்பூழ் – ஒருவகைப்
பறவை
தொய்யாவுலகம் - ஈறுகெட்ட
எதிர்மறைப் பெயரெச்சத்
தொடர்
தவத்தலையே - உரிச்
சொற்ருெடர்

4 வாக்கல் – சோறு, ஆகுபெயர்
கொளீஇ – இசைநிறை
யளபெடை
மிதவை – கூழ்
அல்லற்காலை - வேற்றுமைத்
தொகை

5 கொள்ளன்மின் – முன்னிலை
பன்மைஎதிர்மறை
வினைமுற்று
வரூஉம் – இசைநிறை
அளபெடை
பேதைச்சோழன் -
வேற்றுமைத்தொகை
நில்லலன் - எதிர்மறை
வினைமுற்று
ஒழிக்க – வியங்ககோள்
வினைமுற்று

6 கந்து – பற்றுக்கோடு
வருவன் – வினைமுற்று
வியத்தொறும் வியத்தொறும்
- அடுக்குத்தொடர்
அளியது - இரங்கத்தக்கது

7 துகிர் - பவளம்
பொன்னுந் துகிரும் -
எண்ணும்மை
மாமலை - உரிச்சொற்ருெடர்
சேய - குறிப்புவினையா
லணையும்பெயர்
சாலார் சாலார் – அடுக்குத்
தொடர்

8 மழூஉ - இசைநிறை -
அளபெடை
உணக்கும் - வாட்டும்
மாதோ, அத்தை - அசை

9 வெளில் - கம்பம்
கலுழ்ந்த - கலங்கிய
பேரிலை, மூதூர் - பண்புத்
தொகை

10 பாடுநர், ஆடுநர் - வினையாலணையும் பெயர்
ஆய்கோலன் - செங்கோலன்
சாயல் - மென்மை
நனந்தலையுலகம் - உரிச்சொற்றொடர்
அரந்தை - துன்பம்
11 வயங்கிழை-வினைத்தொகை
அன்பிலாளா - விளி
வெய்யோள் - மனைவி
சால் புதல்வன் - உரிச்சொற்றொடர்
12 அளிப்ப - பலர்பால் வினைமுற்று
தொன்னட்பு – பண்புத் தொகை
தம்முழை - உழை ஏழனுருபு

## திணை விளக்கம்

1 பாடாண்டிணை : பாடப்பெறும் ஆண் மகனுடைய புகழ், வலி, கொடை, முதலியவற்றைக் கூறுதல்.

2 வஞ்சித்திணை: அரசன்வஞ்சிப் பூவைத் தலையிலே சூடி பகைவருடைய நிலத்தைக் கைக்கொள்ளக் கருதுதல்

3 பொதுவியல்: எல்லாத் திணைகளுக்கும்பொதுவாகிய இலக்கணங்களைத்தொகுத்துக் கூறுவது

4 இயன்மொழி :
பாட்டுடைத் தலைவனின் இயல்பை எடுத்து மொழிதல்

5 துணைவஞ்சி :
பிறரை வெல்லவாவது கொல்லவாவது நிற்கின்றான் ஒருவனைச் சில கூறி ஒற்றுமைப் படுத்துதல்

5 பொருண்மொழிக்காஞ்சி :
முனிவர் முதலியோர் பாட்டுடைத் தலைவனுக்கு இம்மை மறுமைகளின் உறுதிப் பொருள்களை எடுத்து மொழிதல்

கையறுநிலை:
அரசன் இறந்தபின் அவனைச் சேர்ந்தோர் அதைநினைந்து செயலற்றுக் கூறுதல்

# பெரிய புராணம்

1 தாண்டவம் - ஐந்தொழிலை விளக்கும் கூத்து
ஈண்டியபுகழ் - பெயரெச்சத் தொடர்
ஆண்டசீரரசு-திருநாவுக்கரசர்
2 களவு பொய் காமங் கோபம்-உம்மைத்தொகை
குற்றங்காய்ந்தார் - வேற்றுமைத் தொகை
3 பந்தர் - பந்தல் கடைப்போலி
முடிவிலாவறங்கள் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத் தொடர்
4 மடப்பிடி - உவமையாகுபெயர்
5 உறுவேனிற் - உரிச்சொற்றொடர்
நீர்த்தடம் - வேற்றுமைத் தொகை

6 மந்தமாருதம் – தென்றல்
சீதம் - குளிர்ச்சி
சந்தம் – புகழ்

7 சாலே குளங்கா – உம்மைத் தொகை

8 நின்றவரை - வினையாலணையும் பெயர்
தொல்பதி – பண்புத்தொகை

9 கடைத்தலே - முன் பின்னுகத் தொக்கது

10 கழல் - தானியாகு பெயர்
செய்தேன் கொல் - கொல் வினுப்பொருள் தரும் இடைச் சொல்

11 குன்றவில்லார் - சிவபெருமான்
அணேந்தோம் – தன்மைப் பன்மை வினைமுற்று

12 ஆறணியுஞ் சடை முடியார் - கங்கையைத் தலேயிலே அணிந்த சிவபெருமான்
கோதின் மொழி – குற்றமில்லாத மொழி

13 திருத்தொண்டு – சிவபெருமானுக்குச் செய்யுந்தொண்டு

14 இம்மையிலும் - உம்மைஇறந்தது தழுவிய எச்சவும்மை
என்போல்வாரும் – இழிவு சிறப்பும்மை

15 கல் மிதப்பு - கல்லாகிய தெப்பம்
யாருளரே – ஏகாரம் எதிர் மறை

16 பிறதுறை - பிற சமயங்கள்
சிறுமையேன் - குறிப்பு வினையாலணையும் பெயர்

17 கர கமலம் – உருவகம்
சரண கமலம் – திருவடிகள்

18 அருநிதியம் – பண்புத் தொகை

19 இல்லவர்க்கும் - மனேவி யார்க்கும்
கொடு - இடைக்குறை

20 முனேவர் - தலேவர்
புனேமலர் - வினேத்தொகை

21 பூசனே - வழிபாடு
வந்தவர் - வினையாலணையும் பெயர்
உய்தும் - தன்மைப் பன்மை வினேமுற்று
சேயவர் - பிள்ளேகள்

24 தாய் தந்தை - உம்மைத் தொகை
அங்கை – உள்ளங்கை

25 பையரா - வேற்றுமைத் தொகை
பை - படம்
பாந்தள் - பாம்பு
வீழா முன்னம் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

26 மாசுணம் - பாம்பு
தாழ்க்க – செய என்னும் வாய்ப்பாட்டு வினே எச்சம்

27 வீழ்வான் - வினையாலணையும் பெயர்
பரிகலம் - உண்கலம்
வீந்தான் - இறந்தான்

29 புறமனே, முன்றில் - இலக்கணப் போலி
அறன் – அறம் கடைப்போலி

30 அடிசில் - சோறு

31 திருத்துதல் - தூய்மை செய்தல்

அருந்தவர் - பண்புத்
தொகை

32 மூத்த சேய் - மூத்த
திருநாவுக்கரசர்
உரையார் - முற்றெச்சம்

33 அங்கணர் - சிவபெருமான்
விதிர்ப்பு - நடுக்கம்

34 சீலம் - ஒழுக்கம்
மாதவர் - உரிச்சொற்றொடர்
உற்றது - வினையாலணையும்
பெயர்

35 கேளா - செய்யா என்னும்
வாய்பாட்டு வினையெச்சம்
நன்று நீர்புரிந்த வண்ணம் -
குறிப்பு மொழி

36 சேவுகைத்தவர் - சிவ
பெருமான்
பூவடி - உவமைத் தொகை

37 பயந்தார் - பெற்றார்

38 தகுவன - வினையாலணையும்
பெயர்

39 கோமயம் - பசுஞ் சாணம்
கதலி - வாழை
ஈர்வாய் – வினைத்தொகை

40 மருங்கு - பக்கம்
எடுத்து நல்க - வினை
யெச்சத் தொடர்

41 நற்றமிழ் - பண்புத்தொகை

42 சொன்மாலை - தேவாரம்
இப்பூதி - பூதி (செல்வம்)
செப்பூதியம் - வினைத்தொகை

43 தில்லை மன்று - வேற்றுமைத்
தொகை
நவ்வியங் கண்ணள் -
உவமைத் தொகை
நவ்வி - மான்

44 மான் மறிக்கையர் - வேற்
றுமைத் தொகை

# இலக்கண நூற்பாக்கள்

## உயிரளபெடை

1 இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலை நெடில்
அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே.

நன். எழு. 36

## வேற்றுமை, அல்வழி

2 வேற்றுமை யைம்முத லாறு மல்வழி
தொழில்பண் புவமை யும்மை யன்மொழி
எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடுங் கெனவீ ரேழே

நன். உயி. புண. 152

## செய்யுள் விகாரம்

3 வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்
விரித்த ஜெகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி
நன். உயி. புண 155

## வழக்கு

4 இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉவென ருகு மூவகை யியல்பும்
இடக்க ரடக்கன் மங்கலங் குழூஉக்குறி
எனமுத் தகுதியோ டாறும் வழக்கியல்
நன். பெய. 267

## ஆகுபெயர்

5 பொருண்முத லாரூே டளவைசொற் ருனி
கருவி காரியங் கருத்த னுதியுள்
ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன வாகு பெயரே
நன். பெய. 290

## வியங்கோள் வினைமுற்று

6 கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலு மிடம்பா லெங்கு மென்ப
நன். வினை. 338

## வினையெச்ச வாய்பாடுகள்

7 செய்து செய்பூ செய்யாச் செய்யூ
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் ருறுமுக் காலமு முறைதரும்
நன். வினை. 343

## வினைத்தொகை

8 காலங் கரந்தபெய ரெச்சம் வினைத்தொகை

நன். பொ. 364

## பண்புத்தொகை

9 பண்பை விளக்கு மொழிதொக் கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவுங் குணத்தொகை

நன். பொ. 365

## அன்மொழித்தொகை

10 ஐந்தொகை மொழிமேல் பிறதொக லன்மொழி

நன். பொ. 369

## ஏகார விடைச்சொல்

11 பிரிநிலை வினாவெண் ணீற்றசை தேற்றம்
இசைநிறை யெனவா றேகா ரம்மே

நன். இடை. 422

## ஓகார இடைச்சொல்

12 ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே

நன். இடை. 423

## உவமையணி

13 பண்புந் தொழிலும் பயனுமென் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்த்
தொப்புமை தோன்றச் செப்புவ துவமை

தண்டி. பொருள். 31

## உருவகவணி

14 உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்
தொன்றென மாட்டினஃ துருவக மாகும்

தண்டி, பொருள். 36

## வேற்றுப்பொருள் வைப்பணி

15 முன்னென்று தொடங்கி மற்றது முடித்தற்குப்
பின்னொரு பொருளை உலகறி பெற்றி
ஏற்றிவைத் துரைப்பது வேற்றுப்பொருள் வைப்பே

தண்டி. பொருள். 47

## தற்குறிப்பேற்றவணி

16 பெயர்பொரு ளல்பொரு ளௌவிரு பொருளினும்
இயல்பின் விளைதிற னன்றி யயலொன்று
தான்குறித் தேற்றுதல் தற்குறிப் பேற்றம்

தண்டி. பொருள். 55.